விலை ரூபா 1.25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 புரட்டாதி 24 ஸபர் 5 இதழ் 242

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 10-10-1986

## துணிவிருந்தால் நேருக்குநேர் போருக்கு வாருங்கள்

### புளொட் போராளிகளுக்கு கோட்டை இராணுவம் சவால்

யாழ்ப்பாணம், வெள்ளி

துணிவிருந்தால் நேருக்கு நேரானபோரில் ஈடுபட இன்று பிற்பகல் 2 30 மணிக்கு யாழ். நூலகத்துக்கு வாருங்கள் என யாழ். கோட்டை இராணுவம் எழுத்து மூலமாக யாழ். கோட்டைப் பகுதியில் 'சென்றிக்கு' நிற்கும் 'புளொட்' போராளிகளிடம் கேட்டது. இதனை ஏற்று புளொட் போராளிகள் யாழ் நூலகத்துக்குச் சென்று போருக்காகக் காவல் இருந்து பின் ஏமாற்றத்துடன் திரும்பி வந்தனராம்.

(5-ம் பக்கம் பார்க்க)

### இராணுவத்தினர் அனுப்பிய கடிதம்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்.கோட்டை இராணுவ முகாமிலிருந்து புளொட் போராளிகளுக்குச் சவால் விடுத்த இராணுவத்தினர் சிங்களத்தில் எழுதப்பட்ட கடிதமொன்றின் மூலமே அச்சவாலை விடுத்துள்ளனர்.

அக்கடிதம் யாழ்.கோட்டை

(5ம் பக்கம் பார்க்க)

# தீவிரவாதிகள் ஆயுதங்களைக் கீழேவைக்கும்வரை சபையில் அரசின் யோசனைகள் சமர்ப்பிக்கப்படமாட்டாது - ஜனாதிபதி

கொழும்பு, வியாழன

"தீவிரவாதிகள் ஆயுதங்களை கீழேவைத்துவிட்டு அரசுடன் சமரசப் பேச்சு நடத்துவதற்கு இணக்கம் தெரிவிக்கும் வரையில் மாகாணசபைகளை ஏற்படுத்தும் அரசின் யோசனைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட மாட்டாது"

இவ்வாறு ஜனாதிபதி ஜே ஆர் ஜயவர்த்தன நுகேகொடையில் இன்று மாலை நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் கூறினார்.

தொடர்ந்து அவர் தமது உரையில் இந்தியஅரசும். தமிழர் விடுதலைக் கூட்டணியும் இந்த சமரசப் பேச்சுக்களில் கலந்துகொள்வது அவசியமாகும். தற்போது ஜனதாவிமுத்தி பெரமுனை வடபகுதி தீவிரவாதிகளுடன் இணைந்துகொண்டு நாட்டில் சர்வாதிகாரத்தை ஏற்படுத்த முனைகிறது என்றார்

நாம் அனுபவித்துவரும்சுதந்திரத்தை இழக்க வேண்டிய நிலை ஏற்படும் பட்சத்தில்அந்த

(8-ம் பக்கம் பார்க்க)

## தமிழீழ போர் நிதி அதிர்ஷ்டலாபச்சீட்டு விற்பனை இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், வெள்ளி

இன்று மாலை 5-45 லிருந்து தமது மாதாந்த அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு டிக்கற் விற்பனையை தமிழீழ இராணுவத்தினர் நடத்தவுள்ளனர்.

தமிழீழம் போர்நிதி அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு தமிழ் மக்கள் எடுத்துச் சென்று கொண்டிருக்கும் தமிழீழ இலட்சியத்தை அடையப் பயன்படுத்தப்படுமென இவர்கள் இது சம்பந்தமாக வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்கள்.

தமிழீழ மக்கள் இதில் தமது பூரண ஒத்துழைப்பினைத் தருமாறு இவர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

முதலாவது டிக்கற் விநியோகம் ஸ்டான்லி வீதி ஸ்ரீ தர் தியேட்டருக்கு அருகாமையிலுள்ள தமது காரியாலயத்தில் நடைபெறுமென இவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

(மானி-நிரு)

## படமெடுக்க முயன்ற 'ஹெலி' மீது தாக்குதல்

யாழ்ப்பாணம், வெள்ளி

மண்டூமடை அரண்களைப் படமெடுக்க முயன்ற ஹெலிகொப்டர் மீது 'புளட்' போராளிகள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தை அடுத்து ஹெலிக்கொப்டர் முகாம் திரும்பியது.

யாழ் மத்திய கல்லூரிமுன்பாகவுள்ள வீதியில் அமைந்துள்ள 'புளட்' போராளிகளின் மண்டூமடை அரண்களைப் படமெடுக்க முயன்ற ஹெலிக்கொப்டர் மீதே நேற்றுக்காலை துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. (ச)

## திருமலை மாவட்டத்தில் இராணுவத்தின் நடவடிக்கை தமிழ் மக்களை அவர்களது இடங்களிலிருந்து துரத்தும் நோக்கமே!

### அட்டூழியங்களை நிறுத்தக்கோரி 'அமிர்' ராஜீவுக்கு மகஜர்

சென்னை, ஒக் 9

"கிழக்கு மாகாணத்தில் குறிப்பாகத் திருமலை மாவட்டத்தில் தமிழ் மக்கள் பாரம்பரியமாக இன வாரியாக வாழ்ந்து வரும் பிரதேசங்களிலிருந்து அவர்களை அடித்துத் துரத்தும் நடவடிக்கைகளில் இலங்கை அரசும், அதன் இராணுவமும் ஈடுபட்டுள்ளன இவ்வித நடவடிக்கைகளை நிறுத்தும் வரை இலங்கை அரசுடனான சமாதானப் பேச்சு வார்த்தைகள் அர்த்தமற்றதாகிவிடும்"

தமிழ்ப் பகுதிகளிலுள்ள இராணுவமுகாம்களை மூடிவிடுவதற்கும் தமிழர்களுக்கெதிரான திட்டமிட்ட தாக்குதல்களை நிறுத்துவதற்கும் உடன் நடவடிக்கை எடுக்குமாறு கோரி மகஜரொன்றை இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்திக்கு அனுப்பி வைத்த தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் அ அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர்தனதுமகஜரில் மேலும் கூறியுள்ளதாவது;

(8-ம் பக்கம் பார்க்க)

## திருமலையில் 5கிராமங்கள் போராளிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது

### லெப். விஜயரத்ன தகவல்

கொழும்பு வியா.

"கிழக்கு மாகாணத்தில் தமிழ் போராளிகள் இன்னும் பலமான நிலையில் இருக்கிறார்கள்" என்று திருமலை பாதுகாப்புப் படைத் தலைவர் லெப்டினன்ட் கேர்ணல் லஷ்மன் விஜயரத்ன தெரிவித்துள்ளார்

திருமலைக்கு விஜயம் செய்த வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் மத்தியில் பேசும் போதே அவர் இத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: கடந்த வாரம் சாம்பல்தீவில் நடைபெற்ற சண்டைக்குப் பின் நகரைச் சுற்றியுள்ள 5 கிராமங்கள் தமிழ் போராளிகளின் கட்டுப்பாட்டிலேயே

(5ம் பக்கம் பார்க்க)

## மலையக மாணவரின் போராட்டத்துக்கு தமிழீழத்தவர்களும் ஆதரவு வழங்கவேண்டும்

### - மாணவர் இளைஞர் பொதுமன்றம்

யாழ்ப்பாணம், வெள்ளி

மலையகத்தில் பாடசாலைகளைப் பகிஷ்கரித்து நடைபெறும் போராட்டத்தில் ஈழப்பகுதியில் வாழும் ஏனைய மாணவர்களும் பூரண ஆதரவினை வழங்குமாறு மாணவர் இளைஞர் பொதுமன்றம் அறைகூவல் விடுத்துள்ளது.

இது சம்பந்தமாக மாணவர் இளைஞர் பொதுமன்றம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கையில் கல்வித் தரம் மிகக்குறைந்தபிரதேசமாகமலையகம் ஆரம்பகாலம் தொட்டே உருவாக்கப்பட்டு வருகிறது. மலையகத் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு கல்வியினை வழங்கினால் மலையகத் தோட்டங்களில் தொழிலாளர்களிற்கு பஞ்சம்ஏற்பட்டுவிடும், எனவே அவர்களுக்கு கல்வியினை வழங்குதல் தடுக்கப்பட வேண்டுமென்ற நோக்கத்துடன் பிரித்தானிய ஏகாதிபத்திய ஆட்சியிலும் அதனைத் தொடர்ந்து வந்த ஸ்ரீலங்கா இனவெறி அரசுகளும் தொழிற்பட்டு வருகின்றன ஏற்கனவே ஸ்ரீலங்கா அரசு தோட்டப் பாடசாலைகளை மூடியும் நகரங்களுக்கு மலையக மாணவர்கள் சென்று

(5ம் பக்கம் பார்க்க)

## மலையகத்தில் கைதான 53இளைஞர்களைவிடுதலைசெய்ய ஜனாதிபதியிடம் கோரிக்கை

கொழும்பு, வியாழன்

மலையகத்தின பலபகுதிகளில் கைதுசெய்யப்பட்டு நீண்ட நாட்களாக தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள 53 தமிழ் இளைஞர்களை விடுதலை செய்ய வேண்டும் என ஜனாதிபதியிடம் தான் கோரியுள்ளதாக கிராமிய தொழிற்துறை அபிவிருத்தி அமைச்சர் எஸ்.தொண்டமான் தெரிவித்துள்ளார்.

மலையகத்தில் இடம்பெற்ற பொதுவைபவம் ஒன்றில் பேசுகையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த 53 இளைஞர்களும் விடுதலை செய்யப்பட வேண்டும் அல்லது நீதிமன்றத்தில் ஆஜர் செய்யவேண்டுமென ஜனாதிபதியிடம் வேண்டியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். [ஒ]

## அறிவித்தல்

### (பெயர் மாற்றம்)

கடந்த பல காலங்களாக

Intersun Group

என்ற பெயரில் பிரயாண ஒழுங்குகளை மேற்கொண்டுவந்த எமது ஸ்தாபனம் 8-10-1986 (புதன்கிழமை) தொடக்கம்

GLORIA TRAVELS

என்ற புதிய பெயருடன் இயங்கும் என்பதை சகலருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

GLORIA TRAVELS,

சின்னத்தம்பி அவெனியூ,

மானிப்பாய்.

[A-1441]

# வரி விளம்பரம்

## வகுப்புகள்

87-ம், 88-ம் ஆண்டிற்கான G.C.E. A/L வகுப்புகள் 16-10-86 ஆரம்பமாகின்றன. விபரங்களுக்கு; S. அருள்நங்கை 73, உயர்கலைக்கல்லூரி, யாழ்ப்பாணம். C 1425

பயிற்சிபெற்ற ஆங்கில ஆசிரியரினால் 4ம் ஆண்டிலிருந்து 9ம் ஆண்டு வரையிலான ஆங்கில வகுப்புகளுக்கு உடனடியாகப் புதிய மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். தொடர்புகளுக்கு; 11, அரசடி ஒழுங்கை, வண்ணார்பண்ணை. (C 5051)

9 மாத டிப்ளோமா மனையியல் வகுப்புக்கள், கேக் ஐசிங், சமையற்கலை, தையற்கலை, பூவேலை, கைவேலை, கோலம், கூந்தல் அலங்காரம், வர்ணம் தீட்டுதல், ஆங்கிலம், முதலுதவி வகுப்புக்கள். ஆரம்பம்: 15-10-86. Ladies' Academy (Regd), Victoria Road, Jaffna. (C 5067)

பௌதீகவியல்: N பத்மநாதன் B. Sc (Hons) 87 Batch; 11-10-86 முதல் அலகு 5: 'புலங்கள்' நாகலிங்கம் இன்ஸ்ரிரியூட், திருநெல்வேலி (C 5117)

108 Brown Road, A/L 87, பொது இரசாயனம் ஆசிரியர்: சத்தீஸ், ஆரம்பம்: 11-10-86 சனி 2-30 p m. நேரம்: சனி, ஞாயிறு 2-30-4-30 p m. [C5112]

யாழ். நுண்கலைக் கல்லூரியில் விஜயதசமி தினமாகிய 12-10-86 ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை 3-00 மணி தொடக்கம் 5-00 மணிவரை வாய்ப்பாட்டு, வயலின், மிருதங்கம், பரதநாட்டியம் முதலிய இசைக்கலைகளைப் பயில விரும்பும் மாணவர்க்கு வித்தியாரம்பம் செய்துவைக்கப்படும். தொடர்பு: மூ. கண்ணன், 646, கே.கே எஸ். வீதி. நாச்சிமார்கோவிலடி, யாழ்ப்பாணம். [C 5104]

### இலவசமருத்துவ சிகிச்சை

சகல நோயாளர்களும் பார்வையிடப்படுவர்
இடம்:
பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி
காலம்: 12-10-86
ஞாயிற்றுக்கிழமை
காலை 9-00 மணி

**வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம்**
C 5047

### அன்பின் அழைப்பு

இன்று வெள்ளிக்கிழமை 10-10-86பி ப. 2-30 மணிக்கு ஆனைக்கோட்டை புதுவாழ்வு நிலையத்தின் செபமண்டபம் திறப்பு விழா வழிபாட்டில் கலந்து கொள்ள அன்புடன் உங்களை அழைக்கிறோம்.

புதுவாழ்வு
நிலையத்தார்,
ஆனைக்கோட்டை.
C 5127

## விற்பனைக்கு

மைசூர் அரிசி நம்பர் 1. கல்லில்லாதது. சுத்தமானது தரமானது, சுவையானதும் கூட. கைதேர்ந்த தொழிலாளர்களால் இயந்திரமூலம் சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டது உங்கள் சகல தேவைகளுக்கும் எங்கும் கிடைக்கும். மைசூர் அரிசியையே கேட்டுவாங்குங்கள். ஒருமுறை பாவித்தால் உண்மை விளங்கும். மைசூர் அரிசி ஆலை, புனித அன்னம்மாள் கோவில்வீதி, மானிப்பாய் [C-5042]

அரியாலை மேற்கு கலைமகள் வீதியில் (காந்தி சனசமூக நிலையத்துக்கருகில்) உள்ள காணி ஒன்றே கால் பரப்பு [1¼] உடன் விற்பனைக்குண்டு விலை முழுவதும் 65 000/- தவணை முறையிலும் செலுத்தலாம். ஐ பொன்னுத்துரை, 19 புவனேஸ்வரி அம்பாள் வீதி, நல்லூர், யாழ்நகர். A-1446

சாவகச்சேரி கல்வயலில் சகல பிரயோசனங்களும், மின்சார வசதியும் கூடிய 12½ பரப்புக்காணி உடன் விற்பனைக்குண்டு. விபரம்: க சிவசிதம்பரம் 16/7, கலட்டி அம்மன் கோவிலடி, சீனியர்லேன், யாழ்ப்பாணம். (C-5034)

வட இந்தியா முறைப்படி தயாரிக்கப்பட்ட "மாங்காய் ஊறுகாய்", "வெள்ளைப்பூடு அச்சார்", "தேசிக்காய் ஊறுகாய்" மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு M G M ,777,K.K S Road and 208, 1st Cross St. Jaffna. Telephone 22611 (C 5069)

தமிழ்க் தட்டச்சு இயந்திரம் (Olympia 15'' Standard Typewriter) உடன் விற்பனைக்குண்டு. Fudo Enterprises 39/17. மின்சார நிலைய வீதி 3-ம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [C 5124

பெரிய அளவிலான செப்பு பித்தளை, அலுமினியக்கிடாரம், வெண்கல அசையாமணி, திருவாசி, குத்துவிளக்கு, பூச்சாடி, மெழுகுவர்த்தி ஸ்ராண்ட், ஸ்தூபி, வேல், சூலம், கெண்டி, தூக்குவிளக்கு, சருவக்குடம், பொங்கல் சருவம், கும்பச்செம்பு, நிறைகுடம் செட். யப்பான்-இந்திய றேவகைகள், எவர்சில்வர், அன்பளிப்பு பாவனைப்பொருட்கள் மற்றும் C 50 ஹொண்டா, C 50 ஹொண்டா Chaly மோட்டார் சைக்கிள்களும் தொடர்பு: ஸம்ஸ், 26B, மானிப்பாய் வீதி. யாழ்ப்பாணம். கிளை: 76/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.(C 5113)

## காணவில்லை

திருநெல்வேலியைச் சேர்ந்தவரும் செங்குந்தா மாணவனுமான வைத்தியநாதன் காங்கேயன் (ஈசன்) செவ்வாய்க்கிழமை மாலை முதல் காணமல்போயுள்ளார் இவர் கடைசியாக கறுப்பு நிறக் காற்சட்டையும், நீலச்சேட்டும் அணிந்திருந்தார். இவர் தமது தமக்கையின் லேடீஸ் சைக்கிளுடன் கடைசியாக வீட்டிலிருந்து சென்றுள்ளார். இவரை கண்டவர்கள் அல்லது இயக்கங்கள் உடனடியாக எனக்குத் தகவல் தருமாறு வேண்டுகிறேன். வை மனோன்மணி, 'சரஸ்வதி வாசா', நாவலடி ஒழுங்கை, திருநெல்வேலி. (C 5114)

## கல்வி

கணிதம் G. C. E.(O L.) மாதிரி வினாத்தாள்கள்: முன்னணிக் கல்லூரிச் சிரேஷ்ட ஆசிரியர்களைக்கொண்டு தயாரித்த நான்கு வினாத்தாள்களைக் கொண்ட தொகுதி வினாத்தாள்கள் கற்றவற்றை மதிப்பீடு செய்யவும், மீட்டற் பயிற்சிக்கும், மாணவரைப் பரீட்சிக்கவும் உறுதுணையானவை. ஒரு தொகுதி ரூபா 5-00. பத்துக்கு மேற்பட்ட பிரதிகளுக்கு 20% கழிவு. சு. இராசநாயகம் B A. (London) 784 பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.(C5082)

## தேவை

யாழ். மாநகரசபை எல்லைக்குள் வசிக்கும் புடவை வியாபாரத்தில் அனுபவமுள்ள பெண்பிள்ளைகள் தேவை. விபரங்களுக்கு நேரில்வரவும், த. சங்கரப்பிள்ளை அன் சன்ஸ் 21, நவீன சந்தை, யாழ்ப்பாணம். C-5080

மரக்கடைச்சல்வேலை தெரிந்த ஆண், பெண் இருபாலரும் தேவை. விண்ணப்பிக்க வேண்டிய முகவரி அபிராமி மரவேலைத்தளம், 75, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (ஈழநாட்டுக்கு அருகாமையில்) C-5083

## சேவை

மோட்டர், மின்விசிறி, அடுப்பு, ரான்ஸ்போமர், கிறைண்டர், வாசிங்மெஷின். ஸ்ராட்டர், றிப்சுவிச் ஆகியன உத்தரவாதத்துடன் திருத்த றீவயின்டிங் செய்ய, Omega, Manipay Road, Jaffna. [ஈழநாட்டுக்கு எதிரில்]. (C-5038)

யாழ். சைனீஸ்றெஸ்ரோரன் முதலாம் குறுக்குத்தெரு, பலரின் வேண்டுகோளுக்கு இணங்க எங்களுடைய ஸ்தாபனம் தினசரி இரவு 8-30 மணி வரை திறந்திருக்கும். தொலைபேசி இல: 23460 (C 4790]

### நாலாவது ஆண்டு நினைவஞ்சலி



திரு. ஜயீறஸ் தவராஜா
மலர்வு: 19-02-62
உதிர்வு; 10-10-82

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக செவ்வாய் (14-ம் திகதி) காலை 6மணிக்கு கோவில் வீதியிலுள்ள ஆச்சிரமத்தில் திருப்பலிப் பூசை ஒப்புக்கொடுக்கப்படும். எமது அன்புச் செல்வத்தின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் குடும்பத்தினர், உறவினர். பாண்டியன்தாழ்வு. சுண்டுக்குளி. C 5116

### பட்டயக்கணக்காளர் பரீட்சை - 1987

மேற்படி பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன க.பொ. த. (உயர்தரம்) 4 பாடங்களில் 2 திறமைச்சித்தி பெற்றிருப்பவர்கள் விண்ணப்பிக்கலாம்.

விபரங்களுக்கு :
உதவிப்பதிவாளர்
பட்டப்படிப்புகள் கல்லூரி,
148/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

C 5111

### கராட்டி வகுப்புகள்

ஆரம்பம்: (11-10-1986) சனி மாலை 4-00 மணி.
இடம்: யாழ்.சன்மார்க்க மகாவித்தியாலயம் (பெருமாள் கோவில் முன்பாக),
வகுப்புகள்: சனி ஞாயிறு மாலை 4-00 தொடக்கம் 6-00 மணிவரை நடைபெறும்.

பயிற்சி பெற விரும்புவோர் வகுப்பு நேரங்களில் தொடர்புகொள்ளவும்

பயிற்சி ஆசிரியர்கள்:
திருவாளர்கள் கணேசலிங்கம், சிவதாசன்.
(C 5126)

### பிரயாண ஒழுங்குகள்

டென்மார்க், கனடா ஆகிய நாடுகளுக்கு ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் எமது முகவர் உங்களை அழைத்துச் செல்வார். போகிறவர்கள் உடனடியாக எமது காரியாலயத்தில் தொடர்புகொள்ளவும்.

அத்துடன்,

ஜேர்மனி, பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கும் விசாவுடன பிரயாண ஒழுங்கு செய்து தரப்படும்.

சிங்கப்பூரில் — பணிப்பெண்கள்
Housemaid, Railway underground general workers இவற்றுக்கான வருமான வாய்ப்புக்கள் 21 நாளில் செய்து கொடுக்கப்படும்.

சவுதி, குவைற்-கிளினர். ஹறவேஸ்
இவற்றுக்கான வருமான வாய்ப்புக்கள் உடன் செய்து கொடுக்கப்படும்.

**GROUP ATLANTIC**

அடைக்கலமாதா கோவில் பின்பக்கம்
163, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
[A 1390]

### பிரயாண ஒழுங்குகள் அவசர தேவை

★ சவூதி அரேபியா
(ஹெவி வெயிக்கிள் பஸ் றைவேஸ்)
5 வருட அனுபவத்துடன்
வயது 25 — 44 வரை.

ஸ்கூல் கிளீனேஸ்: 100 பேர்

பஸ் கிளீனிங் லேபறேஸ்: 100 பேர்

ஒரு வாரத்தினுள் பிரயாணம் செய்யலாம்.

உடன் பாஸ்போட், 20 படம்

மற்றும்

லைசென்ஸ் முதலிய ஆவணங்களுடன் நேரில் வரவும்.

**யூனிவேசல் ஏஜென்சி**

125, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(பெற்றோலியம் கூட்டுத்தாபனத்துக்கு முன்பாக, ஆயுர்வேத கல்லூரி அருகாமையில்)

(A 1393)

# லிபியாமீது போலிக் குற்றச்சாட்டு; அமெரிக்க அதிகாரி ராஜினுமா!

வாஷிங்டன், அக் - 9

**அமெரிக்க அரசின் சிரேஷ்ட செய்தித்துறை அதிகாரியான திரு பேர்னுட் கௌல் என்பவர் தமது பதவியை ராஜினுமாச் செய்துள்ளார். லிபியாமீது போலிக்குற்றச்சாட்டொன்றை றீகன் நிர்வாகத்தின் அதிகாரிகள் சிலர் தயாரித்ததையடுத்தே இவர் ராஜினுமா செய்துள்ளார்.**

திரு. பேர்னுட் கௌல் ஒரு முன்னுள் தாலேக்காட்சிப் படப்பிடிப்பாளரும், பத்திரிகை நிருபருமாவார்.

அமெரிக்க செய்திச்சேவையில் லிபியா தொடர்பாக அண்மையில் அபாண்டமான போலிக் குற்றச்சாட்டொன்று தயாரிக்கப்பட்டதாக இவர் தெரிவித்தார்.

அக்குற்றச்சாட்டில் எதுவித தகுந்த ஆதாரங்களுமில்லாமல் லிபியா பயங்கரவாத நடவடிக்கைகளில் மீண்டும் தீவிரமாக இறங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்ததாக திரு. கௌல் தெரிவித்தார்.

இப் போலியான தகவல் வெளியானதையடுத்தே தமது பதவியை தாம் ராஜினுமாச் செய்ய நேரிட்டதாக திரு கௌல் குறிப்பிட்டார்.

றீகன் நிர்வாகம் இவரின் இக்கூற்றை மறுத்துள்ளது. அத்துடன் இதில் எதுவித உண்மையுமில்லை என அது தெரிவித்துள்ளது

## வளைகுடா மோதலை நிறுத்தவும்!

### ஐ. நா. பாதுகாப்புச்சபை கோரிக்கை

நியூயோர்க், அக் 9

வளைகுடா யுத்தத்தை நிறுத்துமாறு ஐக்கிய நாடுகள் ஸ்தாபன பாதுகாப்புச்சபை ஈரான் - ஈராக் ஆகிய இரு நாடுகளையும் கேட்டுள்ளது.

இச்சபை கடந்த ஆறுதினங்களாக வளைகுடா யுத்தம் தொடர்பாக நடத்திய விவாதத்தையடுத்தே நேற்று ஏகமனதாக இக்கோரிக்கையை விடுத்தது.

அரபு மற்றும் அணிசேரா நாடுகள் ஏற்கனவே விடுத்த வேண்டுகோள்களின் அடிப்படையிலேயே இக்கோரிக்கை அமைவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இத்துடன் இரு நாடுகளையும் அவற்றின் சர்வதேச எல்லைகளை அனுசரித்து படைகளை வாபஸ் பெறும்படியும்

[7-ம் பக்கம் பார்க்க]

## ஆப்கானிஸ்தானிலிருந்து---------

## ஆறு சோவியத் இராணுவ அணிகள் வாபஸ்!

மாஸ்கோ, அக் 9

ஆப்கானிஸ்தானிலிருந்து ஆறு சோவியத் இராணுவ அணிகள் விலக்கிக்கொள்ளப்படவுள்ளன.

இத்தகவலை சோவியத் பாதுகாப்பமைச்சு நேற்று அறிவித்தது. அடுத்த புதன்கிழமை [15-ம் திகதி] முதல் இந்த இராணுவ வாபஸ் இடம்பெறுமெனவும் அறிவிக்கப்பட்டது

1980-ம் ஆண்டு சோவியத் இராணுவம் ஆப்கானிஸ்தானினுள் பிரவேசித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

சோவியத் யூனியன் இந்த வாபஸை அறிவித்துள்ளபோதிலும், வாபஸாகவுள்ள

[7ம் பக்கம் பார்க்க]

## கோவா கப்பல் கட்டும் தளம்———

## அதி நவீன கப்பல்களைக் கட்ட விரிவான முறையில் விஸ்தரிப்பு

புதுடில்லி,

கோவா கடற்படைக் கப்பல் கட்டும் தளம் அதிநவீன பல கப்பல்களை கட்டுவதற்காக பலகோடி ரூபா செலவில் விரிவான முறையில் விஸ்தரிக்கப்பட்டு நவீனமயப்படுத்தப்படவுள்ளது.

இங்கு புதிதாக கட்டப்படும் அதிவிரைவு தாக்குதல் கப்பல்களில் நவீன ஆயுத வசதி கருவிகள் பொருத்தப்பட்டிருக்கும் என்று இந்திய கடற்படை நியல் அட்மிரல் வி. எல். கோப்பிகர் வாஸ்கொடகாமாவில் தெரிவித்துள்ளார்.

மதகாம் கப்பல் கட்டும் தளத்தின் ஒரு துணைத்தளமான கோவாவில் வசதிகளை நவீனமயப்படுத்தி மேம்படுத்துவதற்காக அரசு ஏற்கனவே ஏழு கோடியே அறுபது லட்சம் ரூபாவை அளித்துள்ளதாகவும் திரு. கோப்பிகார் தெரிவித்துள்ளார். [சி]

## எரியூட்டும் குண்டிலிருந்து பாதுகாப்பு:

## பொசுபரசு வகை எரியூட்டும் குண்டு

அடுத்து மணல்மூலம் எவ்வாறு இவ்வகைக் குண்டுகளை அணைக்கலாம் என்று பார்ப்போம் மணல் அல்லது உலர் மண்ணைக்கொண்ட மூடைகளாலே அல்லது அவற்றைதனியாக உபயோகிப்பதாலோ இவ்வகைத்தீயை அணைக்கலாம். இதற்கு உங்களால் தூக்கக்கூடியளவு சிறிய மணல் மூட்டைகளைத் தயாரித்துக் கொள்ளுங்கள். ஒவ்வொரு மூடையினுள்ளும் அதனது முக்கால் பங்கே நிரப்பக்கூடியவாறு மணலோ அல்லது உலர்மணலோ இருப்பதுதான் விரும்பத்தக்கதாகும். பின் அதனை இருகைகளாலும் தூக்கி உங்கள் முகத்திற்கு எப்பாக முன்புறம் தூக்கிப் பிடித்தபடி எரிந்துகொண்டிருக்கும் குண்டைநோக்கி முன்சென்று அதன் எல்லாப்பகுதியையும் மூடுமாறு மூட்டையை அதன் மேல் போடவும். எரியூட்டும் குண்டானது இதன்பின்னர் பாரியசேதம் எதனையும் ஏற்படுத்தாது உள்ளேயே எரிந்து அணைந்துவிடும். ஆனுல் வெடித்துச்சிதறக்கூடிய விதத்தில் உயர் வெடிமருந்தைக் கொண்ட எரியூட்டும் குண்டுகளாயின் மேற்கூறிய முறை சாத்தியமற்றதாகும். ஏனெனில் இவ்வகைக் குண்டுகள் விழுந்து ஒருசில செக்கன்களுக்குள்ளாகவே வெடித்துச் சிதறக்கூடியன.

இனிஉங்கள் உடலின்மேல் மக்னீசியம் அல்லது தேமைற் துகள்கள் விழுந்து எரிந்துகொண்டிருக்குமாயின் அதற்குரிய உடனடியான செயற்பாடுகளைப் பற்றிப் பார்ப்போம். எரியும் மக்னீசியத் துகள்கள் உங்கள் உடலின் மேல விழுமாயின் மிகவிரைவாக எரிந்து தோலினூடாக உள்ளேசென்றுவிடும். எனவே அவை உடனடியாக அகற்றப்படவேண்டியவை. இவற்றை முற்றாக அகற்றுவதற்கு சிறந்த பயிற்சி தேவையாயிருக்கும். மருத்துவர்களின் உதவியுடன் முதலுதவி பயிற்சிபெற்றவர்கள் இதற்குரிய பயிற்சிகளையும் பெற்றிருப்பின் மிக இலகுவாகவும் விரைவாகவும் அவற்றை அகற்றிவிடலாம். இருப்பினும் இவ்வகையானவர்கள் எவரும் அருகில் இல்லாவிடின் அவர்களுக்காக காத்திருந்து நேரத்தை வீணுக்காது சாவணம் போன்ற கருவிகள் ஏதாவதொன்றின் உதவியுடன் நீங்களாகவோ அல்லது வேறொருவரின் உதவியுடனே அதனை அப்புறப்படுத்தி விடுங்கள். எரியும் தேமைற்துகள்கள் உங்கள் உடல் மேல் விழுந்திருப்பின் உடனடியாக அவற்றின்மேல் நீரை ஊற்றி குளிப்பண்ணிய பின்னரே அகற்றவேண்டும். பொதுவாக இவ்வகை எரியூட்டும் குண்டுத்துகள்கள் உடலினுள் துளைத்துச் செல்லக்கூடியவையாதலால் சந்தர்ப்பத்தைப்பொறுத்து குளிரப்



(7-ம் பக்கம் பார்க்க)


# பவர்ஸ் உரம்

இணையற்றது

ரூபா 2,000/- க்குப் மேல்

ABC

ஏ.பவர் அன்ட் கம்பனி லிமிட்டெட்
5, மேல் சத்தம்ஸ் வீதி,
கொழும்பு-1.

## மணிவாக்கு

அறிவாளி அவசியமின்றி ஆபத்தில் சிக்கமாட்டான். ஒரு சில விஷயங்களைத்தான் முக்கியமாக அவன் கருதுவான். ஆனால் ஒரு பெரும் நெருக்கடி வரும்போது தன் உயிரையும் கொடுக்க அவன் தயங்கான். ஏனெனில் சில சூழ்நிலைகளில் உயிர் வாழ்வதில் அர்த்தமே இல்லையென்பது அவனுக்குப் புரியும்.

— அரிஸ்ரோட்டல்.

# நெருக்கடிகளில் உதவும் சரஸ்வதி வழிபாடு

வாக்தேவி என்றும் ஞானசொரூபிணி என்றும் சகலகலாவல்லி என்றும் வணங்கத்தக்கதாக விளங்கும் அம்பிகை சரஸ்வதியாவாள். புத்தகம் படிகமாலை வீணை என்பனவற்றைத் தாங்கி வெள்ளைக்கலை (ஆடை) உடுத்து வெள்ளைப்பணி [ஆபரணம்] பூண்டு வெள்ளைக்கமலத்தே (தாமரைப் பூவில்) வீற்றிருக்கும் சரஸ்வதியை வணங்குவதால் கல்வி மட்டுமன்றி எல்லாக் கலைகளிலும் சிறப்புற்று விளங்கலாம்.

உமையம்மை சிவபெருமானின் ஒரு பாகத்தில் விளங்குவதுபோல மகாலக்குமி திருமாலின் மார்பில் உறைவதுபோல சரஸ்வதி தன்மணவாளனின் நாவில் உறைவதாகச் சொல்வர். இச்சிறப்பால் பிரமதேவர் தன் நான்கு நாக்குகளாலும் நான்கு வேதங்களையும் சொல்லும் அளவிலேயே உலகங்கள் உற்பத்தியாகும் என்பர்.

சரஸ்வதியின் அருள்பெற்றுச் சிறப்புற்ற புலவர்கள் பலர். தங்கத்தாத்தா சோமசுந்தரப்புலவர் சரஸ்வதி வழிபாட்டை விசேடமாகச்செய்து பொதுமக்கள் மதியில் போற்றப்படும் தகுதியைப் பெற்றிருந்தார். இவர் இயற்றிய சரஸ்வதிதுதிகள் அக்காலத்தில் புகழ்பெற்ற பத்திரிகையான 'செந்தமிழ்' பத்திரிகையில் வெளியாகி பல அறிஞர்களின் மதிப்பைப் பெற்றிருந்தன. கல்வியிற் பெரியன் என்றும் கவிச்சக்கரவர்த்தி என்றும் புகழ்பெற்றுள்ளவரும் சாவாமூவா நித்திய இலக்கியமாகிய கம்பராமாயணத்தைப் பாடியவருமாகிய கம்பன் சரஸ்வதியின் விசேட அருளுக்குப் பாத்திரமானவனேயாவான். கம்பனுக்கு வாழ்வில் பல நெருக்கடிகள் ஏற்பட்டபோதெல்லாம் சரஸ்வதியே காப்பாற்றியருளியதாகக் கூறுவர். கம்பரிடத்துப் பொறாமை கொண்டிருந்த அக்காலப் புலவர்கள் கம்பனுக்கு அவமானத்தை ஏற்படுத்த எண்ணினர் ஒரு நாவிதனை அழைத்துக் கம்பனுடன் சகோதர உரிமை கொண்டாடும்படி பணித்தனர். அவனும் அரச சபைக்குச் சென்று தான் பரதேசம் சென்று வந்ததாகவும் கம்பர் தன் உடன்பிறப்பு என்று கூறினன். அச்செயல் புலவர்களின் சூழ்ச்சி என்பதை ஊகித்த கம்பர் சரஸ்வதியின் அருளால் அருமையான சிலம்பு ஒன்றைப் பெற்று அந்த நாவிதனுக்கு அரசன் முன்னிலையில் காட்டி சகோதரா எங்கள் குடும்பச் சொத்தாயிருந்த சோடிச் சிலம்புகள் பாகப்பிரிவினையின்போது எனக்கொன்று உனக்கொன்று கிடைத்ததல்லவா? அருமை பெருமைமிக்க ஒற்றைச் சிலம்புகள் நமக்கு எதற்கு; இருவரும் அரசர்க்கு அன்பளிப்பாகக் கொடுத்தால் அரசி பயன்படுத்துவாள். நீ உன்சிலம்பை நாளை கொணர்ந்து அரசனிடம் கொடு நான் இப்பொழுதே இதை அரசனிடம் கொடுக்கிறேன் என்று கொடுத்தான். சரஸ்வதியின் ஒற்றைச் சிலம்பின் பெருமையைக் கண்ட அரசன் அந்நாவிதனிடம் உடனடியாகச் சிலம்பைக் கொண்டு வரும்படி கூறச் சோடிச்சிலம்பை அறியாத நாவின் அரசனும் அங்குள்ள அனைவரும் அறிய தனக்கும் கம்பருக்கும் ஒரு தொடர்பும் இல்லையென்றும் புலவர்களின் சூழ்ச்சியில் அகப்பட்டுக் கம்பனை அவமானப்படுத்துவதற்காகவே தான் உறவுமுறை கூறிவந்ததாகவும் தெரியப்படுத்தினன் கம்பனும் தான் சரஸ்வதியின் அருளால் உடனடியாகப் பெற்ற சிலம்பே என்று கூறி உண்மையை வெளிப்படுத்தினேன் என்றார்

சரஸ்வதியின் அரு

[5ம் பக்கம் பார்க்க]

— தி. பொன்னம்பலவாணர்

## நமது நோக்கு

# கனடாவிலுள்ள தமிழ் அகதிகளின் புகார்கள்

கடல் மார்க்கமாக கனடாவுக்குச் சென்ற இலங்கை அகதிகள் விவகாரம் ஒருமாதத்துக்குமுன் உலகின் கவனத்தைப் பெருமளவில் கவர்ந்துவிட்ட ஒரு சம்பவமாக இருந்தாலும் கூட கனடாவில் இலங்கை உயர் ஸ்தானிகராக நியமிக்கப்பட்டுள்ள ஜெனரல் வீரதுங்க மீது அங்குள்ள தமிழ் அகதிகள் சுமத்திவரும் குற்றச் சாட்டுகளும் அதனால் எழுந்துள்ள சர்ச்சைகளும் கடந்த சில தினங்களாக உலகக் கவனத்தை மீண்டும் ஈர்க்கத் தலைப்பட்டுள்ளன.

உமாபதிசிவன் பரராஜசேகரம் என்ற இலங்கை அகதி கனடாவிலுள்ள இலங்கை உயர் ஸ்தானிகர் ஜெனரல் திஸ்ஸ வீரதுங்க மனித உரிமை அத்துமீறல்களைப் புரிந்துள்ளார் என கனேடிய அரசுக்குப் புகார் தெரிவித்திருந்தார். அந்தப் புகார்கள்பற்றி கனேடிய அரசு விசாரித்து வருவதாகவும் செய்திகள் வந்தன. அக்குற்றச் சாட்டுக்களை இலங்கைஅரசு உடனடியாகவே மறுத்து அறிக்கை விட்டதுடன் திரு. உமாபதிசிவன் பரராஜசேகரம் ஒரு "பயங்கரவாத" சந்தேகநபர் என்றும் அப்படியான பல சம்பவங்களில் அவருக்குச் சம்பந்தமுண்டு என்றும் கூறி அவர் தெரிவித்துள்ள குற்றச்சாட்டுக்களில் எதுவித உண்மையும் இல்லையென்றும் மறுத்திருந்தது.

இப்பொழுது மேலும் ஆறு இலங்கைத் தமிழ் அகதிகள் ஜெனரல் வீரதுங்கா மீது மனித உரிமைகள் மீறல்பற்றி குற்றஞ்சாட்டி கனேடிய அரசுக்கு சத்தியப் பிரமாணங்களுடன் புகார்களைச் சமர்ப்பித்துள்ளார்கள்.

1979-ம் ஆண்டில் ஜெனரல் வீரதுங்க வடபகுதி முப்படை இணைப்பதிகாரியாக இருந்த சமயம் இவர்கள் திடீரென கைதுசெய்யப்பட்டதாகவும், சித்திரவதைகளுக்குள்ளாக்கப்பட்டதாகவும் புகார் செய்துள்ளனர். இச்சித்திரவதைகளின்போது ஜெனரல் வீரதுங்காவே நேரடியாக ஈடுபட்டு தங்களை அடித்தும், உதைத்தும் துன்புறுத்தியதாக அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் தமது பெயர், விலாசங்களை வெளியிட வேண்டாம் எனவும், வெளியிடப்பட்டால் இலங்கையிலுள்ள தமது உறவினர்கள் பாதிக்கப்படலாம் என அச்சம் தெரிவித்திருப்பதாகவும் கூறப்படுகின்றன.

ஜெனரல் வீரதுங்க ஏற்கனவே கனடாவில் இலங்கை உயர் ஸ்தானிகராக கடமையாற்றுவதற்கு அந்நாட்டு அரசாங்கம் இணக்கம் தெரிவித்து விட்டமையால், மனித உரிமைகள் மீறல் தொடர்பான அவரது நிலைமைபற்றி இலங்கை நீதிமன்றங்கள்தான் தீர்மானிக்கவேண்டும் என கனேடிய வெளிநாட்டு அமைச்சர் திரு ஜோ கிளார்க் தெரிவித்திருப்பதாக பத்திரிகைசெய்திகூறுகின்றது. என்றாலும் புகார் தெரிவித்திருப்பவர்களை தாம் நேரில் சந்தித்து விஷயங்களை அறிய இருப்பதுபற்றியும் திரு. கிளார்க் தெரிவித்துள்ளார்.

ஜெனரல் திஸ்ஸவீரதுங்க மனித உரிமை மீறல்களைப் புரிந்துள்ளார் என இலங்கை நீதிமன்றங்களில் வழக்குத் தொடரப்படுவதை இலங்கையும் வரவேற்றுள்ளது.

இயக்கப் பிரசுரம் ஒன்றை தற்செயலாக வைத்திருந்து பிடிபட்டாலே 'பயங்கரவாதி' யென தமிழர்கள் குற்றஞ்சாட்டப்பட்டு சிறைமுகாம்களில் அடைக்கப்படும் இந்தக்காலத்தில் இலங்கை அரசின் ஒரு சிரேஷ்ட பிரதிநிதிக்கு எதிராக, அதுவும் முப்படைகளின் பொறுப்புவாய்ந்த சிரேஷ்ட அதிகாரியாக இருந்தவருக்கெதிராக எவராவது இந்த நாட்டில் வழக்கொன்றை தாக்கல் செய்யத் துணிவார்களா? காவல் முகாம்களில் நடத்தப்படும் அத்துமீறல்களுக்கு சொந்த வாக்குமூலங்களைத் தவிர வேறுசாட்சியங்களை எங்கிருந்து பெற்றுக்கொள்ளமுடியும்?

மேலும் இலங்கையில் வடக்குக் கிழக்கில் நீதிமன்றங்கள் முறையாகசெயல்படாத நிலையில் நாட்டின் ஏனையபகுதிகளில் தமிழர்களால் இப்படியான ஒரு வழக்கைத் தாக்கல் செய்யக்கூடிய வசதி, வாய்ப்பு பாதுகாப்பு ஏதும் உண்டா?

இங்குள்ள நீதிமன்றங்கள் எப்படிப்பட்டவை என்பதை முன்னாள் இலங்கைப் பாராளுமன்ற உப சபாநாயகரும், குற்றவியல், சிவில் சட்டங்களில் நன்கு தேர்ச்சிபெற்ற நிபுணரும் இலங்கை நீதிமன்ற விவாதங்களில் பழுத்த அனுபவம்பெற்றவருமான திரு. எம். சிவசிதம்பரம் அண்மையில் தமிழ்நாட்டில் சட்டவியல் கருத்தரங்கொன்றில் விளக்கியுள்ளார்

"இலங்கையின் நீதிநிர்வாகத்துறை அடிப்படை உரிமைகளைப் பேணிக்காக்கும் அதிகாரம் இல்லாத அமைப்பாகும். இலங்கை அரசியல் அமைப்பின்படி அரசாங்கத்தின் முழுக்கட்டுப்பாட்டுக்குள் இயங்கும் ஓர் அரச இயந்திரமாகவே நீதிமன்றங்கள் செயற்படுகின்றன" என்பது அவர் கருத்து.

இந்நிலையில் கனடாவிலுள்ள உயர்ஸ்தானிகர் மீது மட்டுமல்ல வேறு உயர் அரச அதிகாரி எவர்மீதும் இப்படியான விடயங்களில் நீதி பெறுவதற்காக தமிழ்மக்கள் வழக்குகளைத் தொடரலாம் எனக் கூறுவதில் அர்த்தமும் இல்லை நடைமுறை சாத்தியமும் இல்லை.

கனடாவிலுள்ள தமிழ் அகதிகளில் பெரும்பாலானவர்கள் தமிழ்ப்பகுதிகளைச் சேர்ந்தவர்கள். அவசரகால நிலைமை, பயங்கரவாதத்தடைச்சட்டங்களின் கொடூரத்தன்மைகளிலிருந்து தப்புவதற்காக இவர்களில் பலர் சென்றிருக்கலாம். இந்தச்சட்டங்களை அமுல் நடத்துவதற்குப் பொறுப்பாக இருந்த ஒருவரை அந்த நாட்டுக்கு உயர்ஸ்தானிகராக அனுப்ப அரசு முடிவு எடுத்த வேளையில் இப்படியான குற்றச்சாட்டுக்களை எதிர்நோக்கவும் நேரலாம் என்பதைப்பற்றி ஆலோசித்திருந்தால் சர்வதேச சமூகத்தின் முன் இன்று விளக்கங்கள் சொல்லிக் கொண்டிருக்கத் தேவையில்லை

இப்பொழுதும்கூட வறட்டுக் கௌரவத்தை ஒதுக்கிவிட்டு கனடாவில் வேறு ஒருவரை உயர்ஸ்தானிகராக நியமிப்பது பற்றி ஆலோசிப்பதே அரசு செய்யக்கூடிய நல்ல காரியம். கனடாவில் உயர்ஸ்தானிகராக நியமிக்கப்பட்டுள்ளவர் மட்டுமல்ல அங்கு அகதிகளாகப் போயுள்ளவர்களும்கூட இலங்கையர்கள்தாம் என சிந்திக்கமுடியாத நிலையில் அரசு இருப்பது கவலைக்குரியது.

சொந்த நாட்டைவிட்டு அகதிகளாகப்புறப்பட வேண்டிய துர்பாக்கிய நிலைக்குத்தள்ளப்பட்ட அம்மக்களின் நலனில் கனடாவைவிட இந்த அரசுக்கே அக்கறை அதிகம் இருக்க வேண்டும்.

## ஆதிநாராயணா வா

கண்ணனே காயாம் பூ வண்ணனே
அண்ணலே ஆதிநா ராயணா
பண்ணிறை வேய்ங்குழல் மன்னனே
கண்ணிறை கருணைகொள் மாலே வா

பாம்பினில் பள்ளி கொள் ஆதியே
ஓம்புயர் கோ குலச் சோதியே
தேம்மொழி கோபி யர்ச் செல்வமே
மேம்படு ஆவினம் சூழ வா

சக்கரா யுதனே திரு மாலே
எக்குறை வினையும் ஒழிப் பவனே
தக்கநல் வரமள்ளித் தரு பவனே
எக்கால மும்நிலைப் பவனே வா.

-மணிமன்றன்

## வரந்தா எல்லாக் கலைகளிலும்!

வெள்ளைமன மும்வெள்ளை மேனியும்
வெள்ளாடையும்
வெள்ளையேடும் கொண்டுவெண் டாமரையல்-
வீற்றிருந்து
வெள்ளைமலை உச்சியிலி ருந்துகலை கள்வளர்க்கும்
வெள்ளியேயுன் பாதம்தஞ் சம்!

அரசியலி லேமொழியி லேதொழில்கள் பலதில்
அரசால்வஞ் சிக்கப்பட் டோம்பல - செல்வம்
அரசபடை யால்எரிக்கப் பட்டதால்ந மக்கு
வரந்தாஎல் லாக்கலைக ளிலும்!

க. யோகராசா

## சக்தியின் பெருமை

ஸ்ரீ மந்திர மாதிருக புருஷ்பமாலாஸ்தவம்

லக்குமி யிலகு தரளவெண கவிகை
யேந்துவள் சசிரதி யென்போர்
தொக்க பொற் கவரி யிரட்டுவர் பரிவாற்
சொற்கலை வாணிகைப் பரித்தி
யக்குறும் வீணை இசைபடு குறிப்பால்
இயலுமெய்ப் பாட்டிறு லிரச
மிக்குற நிருத்தம் அரமபையா புரிவர்
வியந்திவை கண்டருள் அம்மே

பொருள்: இலக்குமிதேவி முத்துக்கள் பதிக்கப்பெற்ற வெள்ளைக் குடையைப் பிடிப்பார் இந்திராணியும் இரதி தேவியும் அன்போடு, திரண்டு பொலிந்து விளங்கும் இரட்டை சாமரையை வீசுவர் சொல்லுக்கு அரசியாகிய கலைவாணி கையிலேந்தி வீணையைவாசிப்பாள் இராகங்களுக்கு ஏற்ற பாவங்களோடு பாவங்களுக்கு ஏற்ற மெய்ப்பாடு தோன்ற சுவைமிகுந்து தோன்றும்படி தேவமகளிர் நடனமாடுவர் அம்மே! தாயே இவற்றைக்கண்டு மகிழ்ந்து அருள்புரிவாயே.

தமிழில் தி. சதாசிவஐயர்
பொருள்: மட்டுவில் ஆ. நடராசா

## நெருக்கடிகளில்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

லைப் பூரணமாகப் பெறும் வகையில் சரஸ்வதி வழிபாடு செய்வோர் இக்கட்டான நெருக்கடிகள் ஏற்படும்போது சமயோசிதமாக நடந்து நெருக்கடிகளிலிருந்தும் விடுபட்டு புகழும் இன்பமும் அடைவர்.

சம்பர் சரஸ்வதியைக் குறித்து விஷேசமாக இயற்ற துதி நூலின் பெயர் சரஸ்வதி அந்தாதி என்பதாகும். சரஸ்வதியந்தாதியைப் போலவே சிறப்பான சரஸ்வதி தோத்திரங்களில் ஒன்றாக விளங்குவதே சகலகலாவல்லி மாலை யாகும். இதனை இயற்றியவர் குமரகுருபரர் என்னும் அருளாளராவார். குமரகுருபரர் சகலகலாவல்லிமாலை மாலையால் சரஸ்வதியைத் துதித்து அருள்பெற்று தனக்குச் சிறிதும் பயிற்சியில்லாத வங்காள மொழியில் புலமை பெற்றார் அப் புலமையால் காசியில் சைவசமயத்தை நிலை நாட்ட ஒரு மடம் ஸ்தாபிக்க வேண்டிய நிலத்தை காசியை ஆண்ட முஸ்லிம் மன்னனிடம் பெற்றார் என்பர்.

படிகநிறம் பவளச் செவ்வாயும் கடிகமழ் பூந் தாமரை போற்கையும் துடியிடையும் ரயும் அல்லும் பகலும் அதைரதமும் துதித்தால் கல்லும் சொல்லாதோ கவி என்னும் சரஸ்வதி துதியின் வழிநின்று சரஸ்வதியைவணங்குவதால் கல் போன்ற மனமும் விவேகம் உடையவரும் புலமையும் கேமையும் பெறலாம்.

## இரண்டாவது பிறந்தநாள் வாழ்த்து



செல்வன் சாருபன்

முருகைபன மகாவலடி வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சிவரத்தினம் வசந்திதம்பதிகளின் செல்வப் புதல்வன் சாருபன் 10-10-86 (இன்று) வெள்ளிக்கிழமை தனது இரண்டாவது பிறந்த நாளை எமது சுதந்திர கீதத்துடன் மிக அமைதியாக கொண்டாடுகின்றார். இவரை அக்கா, மற்றும் அனைவரும் அன்புடன் வாழ்த்துகிறார்கள்.

(C 5135)

## 'சிவாஜி' குணமடைந்தார்

சென்னை, அக். 9

சுகவீனமுற்றிருந்த திரு. சிவாஜி கணேசனன் உடல்நிலை தற்போது பூரண சுகமடைந்துள்ளதாக அவரைப் பரிசோதித்த டாக்டர்கள் தெரிவித்துள்ளார்கள்.

படப்பிடிப்பொன்றில் கலந்து கொள்வதற்காகச்சென்ற திரு சிவாஜி கணேசன், சுகவீனமுற்று கோயம்புத்தூரிலுள்ள மருத்துவமனை ஒன்றில் சிகிச்சை பெற்றபின்னர் இன்றுசென்னை வந்து சேர்ந்தார். [எ]

## துணிவிருந்தால்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

நேற்று யாழ்.'பொலிஸ் நிலையத்துககுச் சென்று திரும்பிய நபரொருவரிடமே கோட்டை இராணுவத்தினர் மேற்படி கடிதத்தைக் கொடுத்தனுப்பி இருந்தனர்.

சிங்களத்தில் ரைப் செய்யப்பட்டு இக்கடிதம் அனுப்பப்பட்டிருந்தது.

இத்துடன் மேலும் ஒரு கடிதம் சிங்களத்தில கையால் எழுதப்பட்டு அனுப்பப்பட்டிருந்தது. அதில் தமக்கு (இராணுவத்துக்கு) சாராயம், சிகரெட் என்பன கொடுத்தனுப்பும்படியும், தமக்கு இத்தகைய பொருட்களைக் கொண்டுவருபவர்களைத் தடைசெய்யவேண்டாம் என்றும் எழுதப்பட்டிருந்தது. (ச-கே)

## புது மண்



பருத்தித்துறைக்குஅருகேஇன்பருட்டி, சக்கோட்டை என இரண்டு கடலை அண்டிய கிராமங்கள் இருக்கின்றன. இங்கு உள்ளகடலுக்குள் இறங்கிப்பார்த்தேன். ஒரு இடத்தை மறைத்துவைத்திருக்கிறார்கள். காரணம் அந்தஇடத்தில் முன்பு ஒருகிணறுஇருந்தது நிலப்பரப்பைக் கடல் விழுங்கியதால் கிணறு கடலுக்குள் வந்து விட்டது.

யப்பானிய மக்கள் கடலைத் தூர்த்து நிலம் ஆக்குகின்றார்கள். இங்கு எமது மண்ணை கடல் கொண்டு போவதை பார்த்துக்கொண்டு வெறுமனே இருக்கின்றோம்.

எமது மண்ணைப்பற்றி நாம்சிந்திக்கவேண்டும்.

- பாணபத்திரன்

## இராணுவத்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முகாமிற்கு தனிப்பட்ட அலுவலாகச் சென்ற ஒருவர் மூலம் புளொட்போராளிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அக்கடிதத்தின் தமிழாக்கம் பின்வருமாறு:

புளொட் சென்ரி பொயின்றில் உங்களுடை யகடிதம்கிடைத்தது. இப்பொழுது நேரம் சரியாக 1-00 மணி உங்களுக்குத் தெரிந்ததுபோல் இன்று 2 15 மணிக்கு உங்களுடன் போர் புரிவதற்கு மிகவும் மகிழ்ச்சியுடன் எதிர்பார்க்கின்றோம்.

அதேநேரத்தில் 27-9-86ல் சற்றடேறிவியூ பத்திரிகையிலுள்ள உங்கள் தலைவரின் பேச்சைவாசியுங்கள்.

பௌத்த சமயத்திற்கும் இந்து சமயத்திற்கும் உள்ள வேறுபாடுமிகவும் சிறியது. அதனால் நாங்கள் உங்கள் மீது கருணைகாட்டுகிறோம்.

சாதாரண மனிதன் ஒருவனைச் சுடுவது கோழை ஒருவன் செய்யும் செயலாகும், அதனால் சாதாரணமனிதனை விட்டு விட்டு எங்களுடன் நேருக்கு நேர் போர் செய்யவாருங்கள்

இற்றைவரைக்கும் எத்தனையோ சிங்கள, தமிழ்பொது மக்கள் இறந்துள்ளனர்.

நீங்கள் இதுவரை பெற்ற வெற்றிதான் என்ன?

தென் இந்தியாவிலிருக்கும் உங்கள் தலைவரையும், அரசியல் வாதிகளையும் நீங்கள் இன்னும் நம்புகிறீர்களா?

சிங்கள பெரும்பான்மை மக்கள் மத்தியில் வாழும் தமிழ் தாய்மார்களையும், தந்தைமார்களையும், தங்கைமார்களையும், தம்பிமார்களையும் அவர்கள் பாதுகாத்துவருகிறார்கள் என்பதை மடையர்களாகிய நீங்கள் அறிவீர்களா?

உங்களுடைய ஆயுதங்களின் விபரங்களை எங்களுக்கு அறிவிக்கவேண்டாம். அதுஉங்களுடைய பாதுகாப்புக்கு நல்லதல்ல.

கடவுள் வணக்கம்.

பொறுப்பதிகாரி
கோட்டை இராணுவ முகாம்
9-10-86.
யாழ்ப்பாணம்.

தமிழ் சகோதரனுக்கு. 135 கலர் பிலிம்ரோல் ஒன்று, சாராயப் போத்தல் 10, சோடாப் போத்தல் பத்து கொடுத்து அனுப்பவும்

இவ்வாறு அக்கடிதத்தில் எழுதப்பட்டுள்ளது. [கே]

## மலையக மாண...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

படிப்பதை தடுத்தும் வருகிறது.

இவற்றின் உச்சக்கட்டமாக மலையகத்தில் கற்பிக்கும் ஆசிரியர்களை "பயங்கரவாதிகள்" என பட்டம் சூட்டி அவர்களை மலையகத்தில் இருந்து வெளியேற்றும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகிறது. கடந்த சில நாட்களிற்கு முன் மலையகத்தில் கைது செய்யப்பட்ட ஆசிரியை விடுதலை செய்யுமாறு காலவரையின்றி மலையகத்தில் பாடசாலைகளைப் பகிஷ்கரித்து நடைபெறும் போராட்டத்தில் மாணவர்களுடன் இணைந்து ஆசிரியர்களும், பெற்றோர்களும் 20 ஆயிரத்திற்கு மேற்பட்ட தொழிலாளர்களும் ஈடுபட்டிருப்பது ஈழப்போராட்டத்தில் முக்கிய நிகழ்வாகும். இப் போராட்டத்திற்கு ஈழப் பகுதியில் வாழும் ஏனைய மாணவர்களும் பூரண ஆதரவினை வழங்குமாறு மாணவர் இளைஞர் பொது மன்றம் அறை கூவல் விடுக்கின்றது." (மா)

## திருமலையில்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

உள்ளது என்று தெரிவித்தார்.

இராணுவ பாதுகாப்புடன் 7 நிருபர்கள் சாபல்தீவுக்கு விஜயம் செய்தனர் அங்கிருந்து 3500 மக்கள் வெளியேறி விட்டதையும் வீடுகள் பூட்டப்பட்டுக் கிடந்ததையும் இப்பத்திரிகையாளர்கள் அவதானித்தனர்.

இப்பகுதியில் போராளிகளை இல்லாமல் செய்துவிட்டோம் ஆனல் சிலர் இங்குள்ள புதர்களில் கண்ணிவெடிகளை வைப்பதற்காக மறைந்திருக்கக் கூடும் என்றும் இப்பகுதிகளுக்கு அவர்களைக் கூட்டிச் சென்ற திரு. விஜயரத்ன கூறினார். (ஓ)

## இருபாலையில் வாணி விழா

யாழ்ப்பாணம், வெள்ளி

இருபாலை கிழக்கு சன சமூக நிலையத்தில் இன்று வாணி விழா நடைபெறவுள்ளது. இவ் விழாவில் கவியரங்கு, உரையரங்கு, வில்லிசை மற்றும் சிறுவர் சிறுமியரின் நடனம், நாடகம் போன்ற நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.


## கடைசி நேர வரி விளம்பரம்

### காணவில்லை

88 ஸ்ரீ 8069 இலக்கமுடைய M.D 90மோட்டார்ச்சயிக்கிள் சுபாஸ் கபேக்கு முன் வைத்துக் காணமற போய் விட்டது [8-10 86] இது சம்பந்தமான விபரம் தெரிவிப்போர்க்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும் S ஞானப்பிரகாசம், 50, கடுக்காயடி வீதி, முத்திரைச்சந்தை, நல்லூர். யாழ்ப்பாணம். [C 5142]

### வகுப்புகள்

12-10-86 ஞாயிற்றுக்கிழமை விஜயதசமி அன்று வாய்ப்பாட்டு வகுப்புகள்வித்தியாரம்பம் செய்யப்படும். செல்வி பராசக்தி சிவலிங்கம் (சங்கீத வித்துவான்) Madras Dip in Music Jaffna campus 3, மணல்தறை வீதி சுந்தர் மடம். (C 5134)

வெலிங்டன்
10-30, 2-30, 4-30, 6-30
பயங்கர சண்டை காட்சிகள் நிறைந்த
Space Hunter
(Adults only)
Sex-Action-Thrill

லிடோ
தினசரி காலை 10-30, மாலை 2-30, 6-30
பிரபு – நளினி
நடித்த
3-வது வெற்றி வாரம்
புதிய வெளியீடு
களரி
நியாயம்

வண்ணை ஸ்ரீ வெங்கடேசப் பெருமாள்
தேர்த் திருவிழாவும் புரட்டாதிச் சனி வழிபாடும்
11-10-86 சனிக்கிழமை
மாலை 3-30 மணிக்கு
தேவஸ்தான அரங்கில்
இன்னிசை வேந்தன்
பொன். சுந்தரலிங்கத்தின்
இன்னிசை விருந்து
நிகழும்.
C 5137

மிது வீடியோ மூவிசாரின்
நேற்றைய வெளியீடு
சரத்பாபு, சில்க்சுமிதா நடித்த
★ கைதி ராணி (V G P மாஸ்டர்)
இன்றைய வெளியீடு
கார்த்திக் - ஊர்வசி - விஜயகுமார் நடித்த
★ தொடரும் உறவு (தரமான பிரதி)
வெகு விரைவில்
கமல்ஹாசன் - ரேவதி நடித்த
கமலின் காதல் காவியமான
★ புன்னகை மன்னன்
விஜயகாந்த் - அம்பிகா நடித்த
★ தழுவாத கைகள்
மிது வீடியோ மூவிஸ்
பிரதான வீதி
சித்தன்கேணி
(A 1451)

புதிய மாணவர்களைச் சேர்த்தல்

யா/இணுவில் சைவ மகாஜன மகாவித்தியாலயத்தில் 7-ம் ஆண்டில் (6-ம் வகுப்பில்) சேர்ந்து கல்வி பயிலும் மாணவர்களுக்கான விண்ணப்ப முடிவு திகதி 20-10-86.

22-11-86ம் திகதியில் கணிதம், தமிழ் ஆகிய பாடங்களில் பரீட்சை நடைபெறும். மாதிரி விண்ணப்பப்படிவத்தில் முடிவு திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும்.

முடிவு திகதியின் பின் விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

(C-5139) அதிபர்

## பிரயாண ஒழுங்குகள்

★ ஹொலண்ட் ★ பெல்ஜியம்
★ ஜேர்மனி ★ பிரான்ஸ்
★ சுவிற்சலண்ட் ★ டென்மார்க்

எங்கள் பிரதிநிதிகள் உங்களை குறித்த நாட்டில் கொண்டு போய் விடுவார்கள்.
பாஸ்போரட், பொண்ட், ரிக்கற் உடன் செய்து தரப்படும்.

**டாக்டர் கே. எஸ். பரஞ்சோதிநாதர்**

பிரசாந்தி வைத்திய நிலையம்
கற்பகப் பிள்ளையார் கோவிலடி,
[ஆஸ்பத்திரி முன் ஒழுங்கை]
உடுவில் கிழக்கு, உடுவில்.

A 1372



## GLORIA TRAVELS

★ கனடா ★ டென்மார்க்
★ பிரான்ஸ் ★ ஜேர்மனி

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகள் செய்து தருவதுடன், டென்மார்க், கனடா செல்வதற்கு உடனடி பிரயாண ஒழுங்குகளும் செய்து தரப்படும்.

மற்றும்

பாஸ்போட், பொண்ட் (BOND), விஸா, ரிக்கற் ஆகியனவும் செய்து கொடுக்கப்படும்.

## GLORIA TRAVELS,

சின்னத்தம்பி அவெனியூ,
மானிப்பாய்.

[A-1391]


## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி 459ம் இலக்கத்தில் வசித்து காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை காசிப்பிள்ளையின் மரணசாதனமின்றி இறந்த மரணச்சொத்து சம்பந்தமாக

காலஞ்சென்றவர்.

வழ. இல. தத்துவம் / 3988
காசிப்பிள்ளை கைம்பெண் பரமேஸ்வரி, இல. 459, கே கே எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

மனுதார்

மேலே இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட காலஞ்சென்றவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1986ம் ஆண்டு ஐப்பசி மாதம் 31ம் நாளன்று முறபகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகா தென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

1986ம் ஆண்டு புரட்டாதி மாதம் 12ந் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி,

கு. குலசிங்கம்,
பதிவாளர்.

(C 5101)

## "மலையக தமிழ் மாணவர்களின் போராட்டத்திற்கு நாம் ஆதரவளிக்கின்றோம்"

### — ரெஸோ

யாழ்ப்பாணம், வெள்ளி

மலையகத்திலுள்ள தமிழ்ப் பேசும் மாணவர்களின் போராட்டத்துக்கு தமிழீழ மாணவர் பேரவை ஆதரவு தெரிவித்து அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வடக்கு, கிழக்கு, மலையகம் வாழ் தமிழ்பேசும மக்கள் மீது சிறிலங்கா நவபாசிச அரசு திட்டமிட்ட ஆக்கிரமிப்பு யுத்தத்தைத் தொடர்ந்தும் விர்வு படுத்தி வருகின்றது. 1972ம் ஆண்டிலிருந்து தமிழ்பேசும் மாணவர்களையும் தனது இனவாதக் கரங்களால் நசுக்கியே வருகின்றது இத்தகைய சூழ்நிலையிலேயே மலையகத் தமிழ்பேசும் மாணவர்கள், ஆசிரியர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தற்போது அரசபடைகளினால் கைதுசெய்யடபட்ட ஆசிரியரை விடுவிக்கக்கோரி தொடர்ச்சியான பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் குதித்துள்ள மலையகத்தமிழ்பேசும் மாணவர்கள் காலங்காலமாக சிறிலங்கா அரசினது அதிகார சாதனங்களினால் துன்புறுத்தப்பட்டு வந்துள்ளனர். எனவே மலையகத்தமிழ்பேசும் மாணவர்களது நியாயமான போராட்டத்திற்கு ஆதரவு கொடுக்கவேண்டியது தேசிய விடுதலையோடு சமூகவிடுதலையையும் கருத்தில் கொண்ட அனைத்து சக்திகளதும் கடமையாகும்.

இதனைக் கருத்தில் கொண்டு தமிழீழ மாணவா பேரவை மலையகத் தமிழ்பேசும் மாணவர்களது போராட்ட நடவடிக்கைகளுக்குத்தனதுமுழுமையான ஆதரவைத் தெரிவிப்பதோடு மலையக மக்களின் தனித்துவத்தை அங்கீகரித்து அவர்களது அனைத்து நியாயமான போராட்டத்திற்கும் ஆதரவு வழங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றது"

[மா]

## ஒலிப்பதிவு நாடா வெளியீடு

யாழ்ப்பாணம், வெள்ளி

அகில இலங்கை திருமுறை மன்றம் விஜயதசமியன்று பஞ்சபுராணபாடல் ஒலிப்பதிவு நாடா வெளியீட்டினை நிகழ்த்தவுள்ளது. நல்லூர் சட்டநாத சுவாமி கோவிலில்மேற்படி மன்றம் நடாத்தும் விஜயதசமி விழாவிலேயே இவ் வெளியீடு நிகழும்.

இவ்விஜயதசமிவிழாவில்புதிய சமயபாட பண்ணிசை திருமுறை இசைவகுப்புக்கள் ஆரம்பநிகழ்ச்சியும் இலவசஅப்பியாசப்புத்தகவெளியீடும் நிகழும்.

வெளியிடப்படும் ஒலிப்பதிவு நாடாவில் திருமுருக கிருபானந்தவாரியார், செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, வித்துவான் சொக்கலிங்கம் (சொக்கன்), திரு. ச. விநாயகமூர்த்தி, திரு. மு. திருஞானசம்பந்தபிள்ளை, திரு. மு. ஞானப்பிரகாசம் ஆகியோர் இவ் ஒலிப்பதிவு நாடாவில் இடம்பெறும்பாடல்களுக்கானவிளக்கவுரைகளைவழங்கியுள்ளனர்.

[ப]

## கண்காட்சி

புங்குடுதீவு, வியா.

புங்குடுதீவு ஸ்ரீமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் அதிபர் திரு. க. திருச்செல்வம் தலைமையில் கல்விப் பொருள் காட்சி நடைபெற்றது. பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வட்டாரக் கல்வியதிகாரி திரு. க. இ ஆறுமுகம் அவ் வைபவத்தை ஆரம்பித்து வைத்தார். சிறப்பு விருந்தினராக கொத்தணி அதிபர் இ. ச. செல்லத்துரை கலந்து கொண்டார்.

## கோரிக்கை

பண்டத்தரிப்பு, வியா.

பண்டத்தரிப்பில் துப்புத் தொழிற்சாலை ஒன்றை நிறுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என்று பண்டத்தரிப்பு மாதர்கிராமஅபிவிருத்திச் சங்கத்தலைவி திருமதி ரூபி ஜேசுதாசன் சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபருக்கு அனுப்பிவைத்துள்ள மகஜர் ஒன்றில்கோரிக்கை விடுத்துள்ளார்.

## மக்கள் இடம் பெயர்வு

ஒட்டுசுட்டான், வியா.

மாங்குளம் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற சில அசம்பாவிதங்களைத் தொடர்ந்து அநேக மக்கள் இடம் பெயர்ந்து அயல் கிராமங்களுக்குச் சென்றுள்ளனர். மேலும் அப்பகுதியில் கடைகள் பல பூட்டப்பட்டுள்ளதுடன் மக்கள் நடமாட்டமும் வெகுவாக குறைந்துள்ளது. [சி-ஓ]

## விபத்து மரணம்

மாவிட்டபுரம், வியா

கடைச்சல் இயந்திரத்தில் வேலைசெய்வதற்காக அதனை இயக்கியஊழியர் ஒருவர் எதிர்பாராத விதமாக மின்சாரம் தாக்கி பரிதாபமாக மரணமானார்.

வீமன்காமத்தில் உள்ள டயானி இன்டஸ்றீஸ் ஊழியரான வல்லிபுரம்சததிடீசீலன் [19 வயது] என்பவரே இவ்வாறு மரணமானார்.

[ரா]


# 25 வருடங்களுக்கு மேலாக நாம் ஆற்றும் உன்னத சேவை

## நீங்கள் எம்மிடம் முதலீடு செய்வதற்கு தரும் உத்தரவாதம்

# ஸ்டான்டர்ட் பினுன்ஸ்

கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக வெற்றிகரமாக செயல்பட்டு வரும் எமது ஸ்தாபனம் ஆயிரக்கணக்கான வாடிக்கையாளர்களின் முதலீட்டுக்கு உத்தரவாதம் வழங்கி நம்பிக்கையளிக்கிறது.

- கவர்ச்சிகரமான வட்டியை வழங்குவதுடன் பெரிய, சிறிய முதலீடுகள் என்ற பேதமின்றி சகலருக்கும் சமமான சேவையளிக்கின்றது.
- குறைந்த பட்ச முதலீடு ரூபா 1000/-. விரும்பும் போது முதலீட்டை அதிகரித்துக் கொள்ளலாம்.
- வட்டியை மாதமொரு முறையாகவோ அல்லது காலாண்டுக்கொரு முறையாகவோ வருடாந்தமாகவோ பெற்றுக் கொள்ளலாம்.
- முதலீட்டுக்கேற்றவாறு கடன் வசதிகளை பெறவும், தவணைமுறையில் பொருட்களை கொள்வனவு செய்யவும் வசதிகள் உண்டு.

இன்றே எம்முடன் தொடர்பு கொண்டு 25 வருடங்களுக்கு மேலாக ஆயிரக்கணக்கான வாடிக்கையாளர்கள் பெற்று வரும் நலன்களை நீங்களும் பெறுங்கள்.

ஏப்ரல் 1ம் திகதி முதல் அமுலுக்கு வரும் புதிய வட்டி விகிதங்கள்.

நிதி நிலைமை தகவல்கள்

| | 1982/83 ரூபா | 1983/84 ரூபா | 1984/85 ரூபா |
|---|---|---|---|
| மூலதனம் | 1,[illegible]00,000 | 1,700,000 | 1,700,000 |
| மூலதன ஒதுக்கீடு | 9,944,500 | 9,944,500 | 9,944,500 |
| வருவாய் ஒதுக்கீடு | 454,741 | 1,200,764 | 1,452,653 |
| மூலதனமும் ஒதுக்கீடும் | 12,099,241 | 12,845,264 | 13,097,153 |
| சேமிப்புகள் | 72,872,705 | 90,507,405 | 123,346,021 |
| கடன்கள் | | 3,211,633 | 1,484,621 |
| சேமிப்பாளர்களுக்கு வட்டி வழங்கு முன் கிடைத்த லாபம் | 15,034,105 | 23,101,763 | 24,658,633 |
| சேமிப்பாளருக்கு வழங்கிய வட்டி | 14,554,614 | 20,060,740 | 23,306,744 |
| வரிவிதிக்கு முன் கிடைத்த நிகர லாபம் | 479,491 | 3,041,023 | 1,351,888 |
| வரிவிதித்த பின் கிடைத்த நிகரலாபம் | 475,491 | 3,041,023 | 1,351,888 |
| ஆதாய பங்குவிதம் | 510,000 | 2,295,000 | 1,100,000 |
| | 30% | 135% | 65% |

1985ம் ஆண்டு டிசம்பர் 31ம் திகதி வரை சேமிப்புகள் ரூபா 13 கோடிக்கு மேல்.

இயக்குநர்கள்:

எச். எஸ். சு. குரே — தலைவர்
மா சட்டத்தரணி (இன்னர் டெம்பள்) சட்டத்தரணி
F. B. I. M. (Eng) A: C. I. (Lond.)
எம். வி. தியாகராஜா, உப தலைவர், நிதி இயக்குநர்
F. C. M. A., F. C. I. A. A., F. B. I. M.
பி. ஞானசேகரம், செயலாட்சி இயக்குநர்
ஜே. சி. ஆர். குரே
F. C. M. A. M. B. I. M.
பிரசன்ன எஸ். குணவர்தன
J. P. U. M. A. C. I. (Lond) A. I. Arb. (Lond)
சட்டத்தரணி, சட்ட ஆலோசகர், நொத்தாரிசு

முக்கிய வியாபாரங்கள்
தவணை முறை கொள்வனவுக்கு நிதி வழங்குதல், டிரக்டர், டிரெயலர்கள், மோட்டார் வாகனங்கள், தேயிலை இயந்திரங்கள், வானொலி பெட்டிகள், பைசிக்கிள்கள், தொலைக்காட்சி பெட்டிகள் போன்ற பொருட்களை குத்தகைக்கு விடுதல்.

வட்டி விகிதங்கள்

| காலம் | ஒரு மாதத்துக்கு | முதிர்ச்சிக்கு பின் |
|---|---|---|
| 6 மாதங்கள் ரூபா 1000/- மும் அதற்கு மேலும் | — | 15% |
| 1 வருடம் ரூபா 1000/- மும் அதற்கு மேலும் | 15% | 17% |
| 2 வருடங்கள் ரூபா 1000/- மும் அதற்கு மேலும் | 17% | 20% |
| 2 வருடங்கள் ரூபா 100, 000/- மும் அதற்கு மேலும் | 19% | 23% |

எம்மிடம் முதலீடு செய்வதே விவேகமானது

ஸ்டான்டர்ட் பினுன்ஸ் லிமிட்டெட்
481, டார்லி வீதி, கொழும்பு 10.
தொலைபேசி: 597111

# இன்றைய பலன்

மாதம்- புரட்டாதி
திகதி- 24 (10-10-86)
கிழமை- வெள்ளி
திதி- ஸப்தமி மு. ப. வரை
நஷத்திரம்- பூராடம்
பி. இ. வரை

மேடம்- வெற்றி உமது அருகில் விரைந்துவரும். அதிக சுறுசுறுப்புடன் செயல்படுவீர்கள். முன்னேற்றப்பாதையில் வீறுநடை போடுவீர்கள்.

இடபம்- உண்மை இன்று ஊமையாகிவிடும். உதவி செய்யப்போய் உபத்திரவத்தைத் தேடிக் கொள்ளுவீர்கள். வரவில் மிஞ்சிய செலவும் ஏற்படும்.

மிதுனம்- அன்புக் கரங்கள் அணைக்கும் தேடியது காலடியில் கிடைக்கும். உத்தியோகச் சிறப்புமுண்டு.

கடகம்- பணம் பறிபோவதற்கு இடமுண்டு. வாழ்வில் சோகம் குடிகொள்ளும். கடமையிலும் வீழ்ச்சி தென்படும்.

சிங்கம்- வித்தையில்வெற்றி காண்பீர்கள். வெளியிடத்துச் செய்தி கிடைக்கும். பிதாவழிப் பெருமையுண்டு.

கன்னி- மனைவாழ்வில் மகிழ்ச்சி தென்படும். வாழ்க்கையிலும் முன்னேற்றமான சம்பவங்கள் இடம்பெறும்.

தொழில்துறையிலும் ஆதரவு பெருகும்.

துலாம்- குடும்பத்தில் சுமுகமான நிலை தென்படும். மாணவருக்கு கனகுஷியான தினம். நேர்மை வழியை நாடுவீர்கள்.

விருச்சிகம்- நண்பர்களுடன் கருத்து வேற்றுமை உருவாகும். வியாபாரிகளாயின் பங்காளிகளுடன் பகைத்துக் கொள்ள வேண்டாம். சிறு விபத்துமேற்படலாம்.

தனுசு- அதிக சிந்தனைசிறிய தலையிடியைக் கொடுக்கும். வாதரோகம் தென்படப் பார்க்கும். கடன்படவும் நேரிடும்.

மகரம்- புதிய தொழில் மூலம் நலனுண்டு. காதலர்களுக்கு கற்கண்டான செய்தியும் கிட்டும். பெரியோர் உதவியும் தப்பாமல் கிட்டும்.

கும்பம்- அதிகாரக் குறைவிற்கு இடமுண்டு. எண்ணித் துணியும் காரியங்களில் தடைகள் பல உருவாகும். பூமிவிவகாரமும் தலைதூக்கலாம்.

மீனம்- தாய்ப்பாசம் பலப்படும். பொதுசன மதிப்பும் கிட்டும். எதையும் துரிதமாகச் செயயின் வெற்றி காண்பீர்கள்.

திருமலை வே. ரவீந்திரன்


## பிரயாண ஒழுங்குகள்

அவசர தேவை

★ சவுதி அரேபியா: ஹெவி வெயிக்கிள் பஸ் றைவேஸ்.
5 வருட அனுபவத்துடன்; வயது: 25-44 வரை

★ ஸ்கூல் கிளீனேஸ்: 100 பேர்

★ பஸ் கிளீனிங் லேபறேஸ்: 100 பேர்

ஒரு வாரத்தினுள் பிரயாணம் செய்யலாம். உடன் பாஸ்போட், 20 படம், மற்றும் லைசென்ஸ் முதலிய ஆவணங்களுடன் நேரில் வரவும்.

டாக்டர் கே. எஸ். பரம்சோதிநாதர்

பிரசாந்தி வைத்திய நிலையம்,
கற்பகப்பிள்ளையார் கோவிலடி,
உடுவில் கிழக்கு, உடுவில்.

பி. கு: இணுவில் ஆஸ்பத்திரிக்கு முன்னால் உள்ள ஒழுங்கையால் வரவும். [A 1394]



## பிரயாண ஒழுங்குகள்

★ டென்மார்க் ★ ஜேர்மனி
★ குவைத் ★ சவூதிஅரேபியா

டென்மார்க், ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கு எமது பிரயாண முகவர் சென்ற வார பயணங்களை வெற்றிகரமாக நடாத்தி முடித்துள்ளார். இதுவரை எமது பல பயணங்கள் வெற்றிகரமாகவும், விரைவாகவும் நடைபெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஜேர்மனிக்கு செல்ல விரும்பும் பெண்கள் (குறிப்பாக மணம் செய்தவர்கள், மணம் செய்யவிருப்பவர்கள்) உங்களை எமது முகவர் நேரடியாக அழைத்துச் செல்வார். 19-ம் திகதிக்கு முன் பயணம் செய்ய உள்ளோம்.

குவைத்தில் Airport Cleaners (ஏயார் போட் கிளீனேர்ஸ்) ஆக வேலை பார்க்க விருப்புபவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம். செல்ல விருப்புபவர்கள் நேரடியாக பாஸ்போட், 6 படங்களுடன் தொடர்புகொள்ளவும்.

சவூதி அரேபியாவிற்கு வீதி அமைப்பு வேலைக்கு பிரயாண ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். விரைவாக அனுப்பிவைக்கப்படுவார்கள். உடன் பாஸ்போட், 6 படங்களுடன் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு:-
N. Bala

பஸ் இல. 764,
பலாலி வீதி,
கோண்டாவில் கிழக்கு.

திருச்செல்வம் வீதி,
கோண்டாவில் கிழக்கு.

★ உங்கள் நன்மை கருதி தீவுப்பகுதியில் ஒமேகா ரவல்ஸ் அன்ட் ரூர்ஸ் என்னும் பெயரில் வங்கை வடிச் சந்தியில் அமைந்துள்ளது.

★ குப்பிளான் சந்திக்கு அருகாமையிலும் ஒமேகா ரவல்ஸ் அன்ட் ரூர்ஸ் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. [A-1395]


## எரியூட்டும் குண்டிலிருந்து,....

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

பண்ணுதலோ அல்லது அகற்றுதலோ எதனை உடனடியாகச்செய்யவேண்டும் எனத் தீர்மானித்து அதனை முதலில் செய்யுங்கள் இவ்வகை எரியூட்டும் குண்டுகளால் தாக்கப்பட்டவர்களுக்கு முதலுதவி செய்யும்பொழுது இந் நூலின் பின்தொடரில்காணப்படும் மூன்றும்நிலைத் தீக்காயங்களிற்குரிய முதலுதவி முறைகளையேபின்பற்றுங்கள்.

இவ்வகை எரியூட்டும் குண்டுகள் போடப்பட்ட இடத்திலிருந்து பாரிய ஒரு பிரதேசத்திற்கு சிறுசிறு எரியும் துகள்களாகச் சிதறிப்பறக்கின்றன. இவற்றின்மூலம் கட்டிடங்களை தீப்பற்றச் செய்வது சிறிதுசடினமாகவே இருக்கும் பெரியதொரு பிரதேசத்திற்கு வெடித்துச்சிதறுவதால் அப்பிரதேசத்தினுள் காணப்படும் எளிதில்தீப்பற்றக்கூடியபொருட்கள், உயிரினங்கள் இலகுவில் தீப்பற்றிக்கொள்கின்றன. முக்கியமாக மக்கள் திறந்த வெளிகளில் திரியும்போது இவ்வகைக் குண்டுகள் போடப்பட்டால் அவர்கள் தாக்கப்படுவது நிச்சயமானதாகக் காணப்படும். இவ் வகைக் குண்டுத்தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு நீரைப் பயன்படுத்துவதே இலகுவானதும் சிறந்ததுமான முறையாகும் நீர்க்குழாயின் மூலம் குண்டு விழுந்த இடத்தைச் சூழவுள்ள பிரதேசமெங்கும் நீரை விசிறியடித்து தீப்பற்ற முடியாத அளவுக்கு ஈரமாக வைத்திருப்பதன்மூலம் தீயை மேலும் பரவவிடாமல் கட்டுப்படுத்தலாம்.

வியட்நாமிய போராட்டத்தின்போது அமெரிக்க அரசினால் பொசுபரசைக் கொண்ட குண்டுகள் வியட்கொங் எனப்படும் வியட்நாமிய கெரில்லாக்களின் இருப்பிடங்கள் ஆதரவான கிராமங்கள் மீது வீசப்பட்டன. பொசுபரசை எரியூட்டும் குண்டுகளில் வெண் பொசுபரசைக் கொண்ட குண்டுகளே தாக்குதிறன் கூடியவையாகும். வெடித்தவுடன் சிதறும் வெண் பொசுபரசுத் துண்டுகள் காற்றில் பட்டதும் எரியத்தொடங்கும். இத் துண்டுகள் உங்கள் உடலின் மீதோ உடைகளின் மீதோ விழுந்தால் காற்றுடன் உள்ள தொடுகை நீங்கும் மட்டும் எரிந்து கொண்டேயிருக்கும் எனவே உங்கள்மீது எரிந்து சிதறும் வெண்பொசுபரசுத் துகள்கள் விழுந்தால் அருகில் நீர்த் தொட்டிகள் அல்லது நீர் நிலைகள் ஏதாவது இருந்தால் தாக்கப்பட்ட பகுதியை நீரினுள் நன்றாக அமிழ்த்தவும். வெண் பொசுபரசுத் துகள்கள் உடலோடு ஒட்டிப் பிடிக்கும் தன்மை கொண்டன ஆதலால் வெறுங்கைகளால் அகற்ற முயற்சிக்காதீர்கள். உங்களருகில் நீர்த் தொட்டிகளெதுவும் காணப்படாவிடின் ஈரமான துணியொன்றாலோ அல்லது சேற்று மண்ணாலோ அதனை நன்கு மூடவும். பின்பு துணியுடன் சேர்த்து அதனை அப்புறப்படுத்தவோ அல்லது கத்திபோன்றகூரான பொருட்களால் வழித்தெடுக்கவோ செய்யுங்கள். எரிவைத் தடுப்பதற்காக எண்ணெய், கிறீஸ் முதலியனவற்றை இடாதீர்கள் வெண் பொசுபரசுத் துகள்கள் அவற்றுடன்சேர்ந்து உடலினுள் இலகுவாக நுழைந்துவிடும். இவற்றினால் ஏற்பட்ட காயங்களும மிக ஆழமாகவும் பல்வேறு அளவுகளிலும் காணப்படுவதால் மூன்றும் நிலைத் தீக்காயங்களுக்குரிய முதலுதவிச் சிகிச்சைகளையே மேற்கொள்ளுங்கள்.

(தொடரும்)

## கீரிமலையில் புரட்டாதிச சனி

யாழ்ப்பாணம், வெள்ளி

கீரிமலை சிவன்கோவிலில் புரட்டாதிக் கடைசிச் சனிக்கிழமையையொட்டி விசேட சனீஸ்வர வழிபாடுகள் நடைபெறவுள்ளன.

மேடராசி, விருச்சிகராசி, தனுராசி ஆகியவற்றில் பிறந்தவர்களுக்கு அட்டமத்து சனி, ஏழரைச்சனி முதற்கூறு, நடுக்கூறு நடைபெறுவதால் இவ்விராசிகளில் பிறந்தவர்கள் கீரிமலை சிவன்கோவிலில் சனிக்கிழமை காலை 6 மணி முதல் நடைபெறும் விசேட சாந்தி ஹோமங்களில் பங்குபற்றவும் நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வரப் பெருமானை வழிபடவும் உரிய ஒழுங்குகள் ஆலயத்தில் செய்யபட்டுள்ளன. (ப)

வளைகுடா...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

அக்கோரிக்கையில் கேட்கப்பட்டுள்ளது

ஈரான் பாதுகாப்புச் சபை இக்கோரிக்கை தொடர்பான விவாதத்தில் கலந்து கொள்ளவில்லை. ஐ நா. இது விடயத்தில் பாரபட்சமாக நடந்துகொள்வதாக ஈரான் தெரிவித்துள்ளது.

இராணுவ...

(3ம பக்க தொடர்ச்சி)

6 இராணுவ அணிகளிலும் அடங்கவுள்ள துருப்பினரின் எண்ணிக்கை பற்றிய விபரத்தை வெளியிடவில்லை.

இதேவேளை இந்த வாபஸ் குறித்து அமெரிக்க பாதுகாப்பமைச்சர் திரு. கெஸ்பர் வெயின்பேக்கர் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

சில காலத்துக்கு முன்னர் அதிகளவில் சோவியத் துருப்புக்களை ஆப்கானிஸ்தானுக்குள் கொண்டுவந்த பின்னரே ஒரு கண்துடைப்பு நடவடிக்கையாக சோவியத் யூனியன் இந்த இராணுவ வாபஸை அறிவித்துள்ளது என்று அவர் கூறினார்.

## இன்று

யாழ்ப்பாணம், வெள்ளி

வண்ணார்பண்ணை இளையதம்பி இந்து வித்தியாலய நவராத்திரி விழா இன்று காலை நடைபெறவுள்ளது.

சைவ நெறிக்கழகத்தலைவரும் வட்டாரக்கல்வி அதிகாரியுமாகிய திரு க. மகேசன் நல்லூர் வட்டாரக்கல்வி அதிகாரி திரு சு சிவநாயகமூர்த்தி ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள். மாணவர்களது கலைநிகழ்ச்சிகளும செல்வி ரா. ஞ் ஜனி ஆசிரியை அவர்களது இன்னிசை விருந்தும் நடைபெறும். (சி)

## மகாலட்சுமி வழிபாடு

யாழ்ப்பாணம், வெள்ளி

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோவிலில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமகாலட்சுமி அம்பாளுக்கு நவராத்திரி காலத்தையொட்டித் தினமும் மாலையில் விசேட வழிபாடுகள் நடைபெறுகின்றன.

விஜயதசமியன்று ஸ்ரீதேவி பூதேவி சமேத வரதராஜர் பொன்னாலை ஆதிவயிரவர் ஆலயத்தில் வாழைவெட்டும் நிகழ்ச்சிக்கு எழுந்தருள்வார். [ப]

## வன்னிவாழை வெட்டுவிழா

யாழ்ப்பாணம், வெள்ளி

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான நவராத்திரி விழாவின் இறுதிநாள் விஜயதசமி விழா 12ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை வன்னிவாழை வெட்டும் நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

அன்றையதினம் மாலை மாவை முருகப்பெருமான் எழுந்தருளி வந்து வியாக்கிராகரவதம் புரிந்து பக்தர்களுக்கு அருட்காட்சி வழங்குவார (வா)

## கொடியேற்றம்

யாழ்ப்பாணம், வெள்ளி

பளை வண்ணாங்கேணி அதி உத்தம கன்னிமரி இரக்கத்தின் மாதா திருவிழா இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து ஒன்பது நாட்கள் நடைபெற்று 19ம் திகதி காலை கூட்டுத் திருப்பலி பூசையுடன் முடிவடையவுள்ளது. [வா]

## ஓராண்டு நினைவஞ்சலி



முன்னாள் ஆர். வி. ஜி. கம்பனி பங்காளரும் கோப்பாய் ருஜினி ஸ்ரோர் உரிமையாளருமாகிய

அமரர் வேலுப்பிள்ளை முருகேசபிள்ளை

மலர்வு: 27-4-1922
உதிர்வு: 21-9-1985
திதி: 10-10-1986

என்றென்றும் மறவா அன்பின் இருப்பிடமே! பாசத்தின் பொக்கிசமே உலகம் போற்ற வாழ்ந்து நாமெல்லாம் உயர்ந்திருக்க அந்த இன்பவாழ்வில் தாங்கள் திளைத்திருக்க அயராது உழைத்த எங்கள் அன்புத் தெய்வமே! தியாகச்சுடரே! நாமெல்லாம் ஆருத்துயரில் ஆழ்ந்திட திடீரென அணைந்த எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கே! எம் வாழ்நாளில் என்றென்றும் நீங்கள் அணைந்தும் அணையாத மறைந்தும் மறையாத குலவிளக்குப்போல எம் உள்ளமெல்லாம் ஒளி வீசும் தங்கள் ஆத்ம சாந்திக்காக நாம் வணங்கும் நல்லூரானை வேண்டி கண்ணீர் பூக்களால் அர்ச்சனை செய்கின்றோம்.

உங்கள் பிரிவால்வாடும் மனைவி, மக்கள் மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்

''ரஞ்சனி வாசம்''
கோப்பாய் வடக்கு,
கோப்பாய் C 5026


## Wyman English Language INSTITUTE

வெளிவந்துவிட்டது

''TOEFL'' சர்வதேச ஆங்கிலப் பரீட்சைக்குரிய பயிற்சிப் புத்தகம் விலை ரூபா 30-00

ஆசிரியர்: S B. IYAR

கிடைக்குமிடம்: 12, வைமன் வீதி, நல்லூர். [C-5075]

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY
வெள்ளிக்கிழமை 10-10-86

கிளிநொச்சி

# இராணுவமுகாமிலிருந்து வெளிவந்த படைகள்மீது போராளிகள் தாக்குதல்

கிளிநொச்சி, வியாழன்

கிளிநொச்சி இராணுவம் முகாமிலிருந்து வெளியேறி 3 கவசவாகனங்களில் கண்டிவீதி வழியாகப் பழையகொலனிக்கு நேற்றுமுன்தினம் வந்தது.

போராளிகள் அவ்விடத்துக்குவிரைந்ததைதொடர்ந்து சில நிமிடங்களில் இராணுவத்தினர் முகாம் திரும்பினர்கள்.

இச்சம்பவத்தின்போது பழைய கொலனியில் பதற்றம் நிலவியது.

இது இவ்வாறிருக்க இராணுவத்தினருக்கு உணவு விநியோகித்தது உட்பட சில குற்றச் சாட்டுகளின் பேரில் திருநகர் வாசிகளான ஒரு தாய்க்கும் மகனுக்கும் கிளிநொச்சி பஸ் டிப்போவிற்கருகில் போராளிகளால் மரணதண்டனை விதிக்கப்பட்டது. [எ]

## இன்று: யாழ்- செயலகத்தில் கலைமகள் விழா

சுண்டுக்குளி, வெள்ளி

யாழ் செயலகத்தில் இன்று யாழ் அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் தலைமையில் கலைமகள் விழா நடைபெறவுள்ளது.

யாழ். செயலக நலன்புரிச் சங்கத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட இவ் விழாவில் சிவத்தமிழச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்துவார். (ஒ)

## ஓய்வூதியக் கொடுப்பனவு பற்றி கோட்டை இராணுவ அதிகாரி அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், வெள்ளி

ஓய்வூதியக் கொடுப்பனவுகள் காசுக்கட்டளையாக, அந்தந்த அஞ்சல்அலுவலகங்களில் வழங்கப்பட்டு வந்தமை நிறுத்தப்பட்டு மீண்டும் யாழ். வீரசிங்க மண்டபத்திலேயே வழங்கப் படவேண்டுமென்று யாழ். கோட்டை இராணுவஅதிகாரியினால் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

மேற்படி விடயம் குறித்து ஆராயும் முகமாக சகல அஞ்சல், உபஅஞ்சல் அலுவலர்களினதும் கூட்டமொன்று எதிர்வரும் ஞாயிறன்று காலை கொக்குவில் அஞ்சல் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு சகலஅஞ்சல், உபஅஞ்சல் அலுவலர்களும் சமுகமளிக்க வேண்டும் என்று கோரப்பட்டுள்ளன.

## யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் வங்கி இறுதிக் கடன் கொடுப்பனவுகள்

யாழ்ப்பாணம், வெள்

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்களுக்கு வங்கிகள் மூலம் வழங்கப்படும் கடன் இறுதிக்கொடுப்பனவுகள் இம் மாதம் 15ம், 16ம், 20ம், 21ம் திகதிகளில் இலங்கை மக்கள் வங்கிகளில் கொடுக்கப்படும்.

சகலபீடங்களையும் சேர்ந்த யாழ்.பல்கலைக்கழக மாணவர்களுக்கான 1985 ம் - 1986 ம் கல்வி ஆண்டுக்குரிய கடைசிக் கொடுப்பனவுகள் பற்றிய மேலதிகவிபரங்களை யாழ் பல்கலைக்கழகத்தில் தெரிந்து கொள்ளமுடியும்.

இலங்கைவங்கிக் கிளைகளில் கடன் பெறுபவர்கள் யாழ். ஆஸ்பத்திரி வங்கிக் கிளையில் இம் மாதம் 15ம், 16ந் திகதிகளில் பெற்றுக்கொள்ளலாம்.

மக்கள் வங்கிகளில் பெறுபவர்கள் யாழ் ஸ்ரான்லி வீதியில் உள்ள மக்கள்வங்கிக் கிளையில் இம்மாதம் 20ம், 21ந்திகதிகளில் பெற்றுக்கொள்ளலாம். (ச-கே)

## தமிழ் மக்கள் இன்னல் குறித்து சுவாமி சித்ரூபானந்தா இந்திய தூதுவருக்கு கடிதம்

கொழும்புத்துறை, வியா.

ஆயுதப் படையினரின் தாக்குதல்களினால் தமிழ் மக்கள் அடைந்து வரும் இன்னல்களை விளக்கிப் பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சேவாச்சிரமச் சுவாமி சித்ரூபானந்தா இந்தியத் தூதுவர் திரு. ஜே. என் டிக்ஸிற்றுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். பிரஸ்தாப கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

"நாம் 1984ம் ஆண்டு ஆகஸ்ட் முதலாம் திகதி தொடக்கம் பல இன்னல்களுக்கு உள்ளாகினோம். பல அப்பாவி மக்கள் கொல்லப்பட்டுள்ளார்கள். கடந்த மாதம் ஏழாம் திகதி நிகழ்ந்த துயரச்சம்பவத்தைத் தங்களுக்குத் தெரியப் படுத்த விரும்புகின்றோம். பின்தங்கிய, வறிய குடும்ப மாணவ, மாணவிகள் பலருக்கும் பாடசாலைச் சீருடைகளை வழங்குவதற்காகச் சேவாச்சிரமத்திற்கு அழைத்திருந்தோம்.

இப்பிள்ளைகள் வீடு திரும்பும் போது ஷெல் தாக்கியதில் 6 வயதுச் சிறுமி ஒருவர் பலியானார். மற்றுமொரு சிறுமி காயமுற்றார். பருத்தித்துறை முனைப் பகுதியிலும் ஷெல் தாக்குதலுக்குள்ளாகிய தாயும் பதினொரு வயது மகனும் அவ்விடத்திலேயே மரணம் அடைந்துள்ளார்கள்.

எங்கள் சோகம் நிரம்பிய வாழ்க்கை பற்றியும் நாம் படும் துன்பங்களையும் இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்திக்குத் தெரியப் படுத்துங்கள்." [ஒ]

## துப்பாக்கிமுனையில் இளம்பெண்ணிடம் மூன்று லட்சம் ரூபா நகைகள் கொள்ளை

யாழ்ப்பாணம், வெள்ளி

வீட்டில் தமது இரு குழந்தைகளுடன் தனிமையில் இருந்த இளம் பெண்ணை துப்பாக்கி முனையில் தாக்கிவிட்டு ரொக்கப்பணம் உட்பட 3 லட்சம் ரூபா நகைகள் கொள்ளை அடிக்கப்பட்டுள்ளன.

உடுவில் 1-ம் கட்டையிலுள்ள க. சுரேந்திரன் என்பவரின் வீட்டிலே இக்கொள்ளைச் சம்பவம் நடைபெற்றது. இவர் வெளிநாட்டில் வேலை பார்க்கிறார். இவரது மனைவியும் இருபிள்ளைகளும் வீட்டிலிருக்கிறார்கள்.

சம்பவத்தினமிரவு 9-30மணியளவில் வீட்டு நாய்க்கு சாப்பாடு போடுவதற்கு வெளியில் வந்தபொழுது திடீரென கைத்துப்பாக்கியுடன் தோன்றிய இரு நபர்களில் ஒருவர் பெண்ணின் வாயை தமது கைகளால் அமுக்கிப் பொத்திக் கொண்டு வீட்டு அறைக்குள் கொண்டு சென்றார்.

அறைக்குள் ஒருவன் அப்பெண்ணின் தொண்டையை கைகளால் நெருக்கு அமுத்த, மற்றவர் தலையில் தனதுகைத் துப்பாக்கியை வைத்துப் பயமுறுத்தி நகைகள், காசு எங்கே என்றார்கள்.

அச்சமடைந்த அந்த இளம் பெண் பெட்டிக்குள் பூட்டி வைத்திருந்த நகைகளையும், ரொக்கபணத்தையும் எடுத்துக் கொடுத்துவிட்டார். அவற்றைச் சுருட்டிக்கொண்டு அந்த நபர்கள் தலைமறைவாகிவிட்டார்கள். (மா)

## மாமடுவவாசிகள் ஆறு பேர் கடத்தப்பட்டு பொருட்கள் சூறை

(வவனியா நிருபர்)

மாமடுவ வாசிகளான ஆறு பேர் இனந்தெரியாதவர்களால் கடத்திச் செல்லப்பட்ட பின்னர் அவர்களின் உடைமைகள் அனைத்தும் சூறையாடப்பட்டுள்ளன.

நேற்று மாமடுவவிலிருந்து வவனியா நோக்கி குறிப்பிட்ட ஆறு நபர்களும் சைக்கிள்களில் சென்றுகொண்டிருக்கையிலேயே கடத்தப்பட்டனர்.

அவர்களின் கைக்கடிகாரங்கள், ரொக்கப்பணம், சைக்கிள்கள் பறிமுதல் செய்யப்பட்ட பின்னர் 6 பேரும் விடுவிக்கப்பட்டனர். [மா]

## தமிழ் மக்கள்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கிழக்கு மாகாணத்தில் குறிப்பாகத் திருமலை மாவட்டத்தில் இலங்கை இராணுவம் தமிழ் மக்களைப் படுகொலை செய்து வருவதுடன் அவர்களுக்கு மேற்கொள்ளப்பட்டு வரும் உணவு விநியோகத்தையும் துண்டித்து வருகிறது. ஒக்டோபர் முதலாம் திகதி தொடக்கம் பல ஆயிரக் கணக்கான இலங்கை அரசாங்கத்தின் இராணுவத்தினர், தமிழ் கிராமங்களான நிலாவெளி, சித்தூர், இலுப்பைக்குளம், சாம்பல்தீவு, சல்லி மற்றும் சூழவுள்ள இடங்களிலும் தொடர்ச்சியான படுகொலை மேற்கொண்டு வருகின்றனர்.

இக் கிராமங்கள் மீது தொடர்ச்சியாக விமானத்திலிருந்து குண்டுகள் வீசப்படுகின்றன; கரையோரப் பகுதிகள் மீது பீரங்கிப்படகுகளால் "ஷெல" தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந் நடவடிக்கைகள் யாவும் தமிழ்ப் போராளிகளை அவர்களின் மறைவிடங்களிலிருந்து தேடி அழிக்கும் நடவடிக்கைகள் என்ற போர்வையில் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன இந் நடவடிக்கையால் பல நூற்றுக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டதுடன் மேலும் பலர் காயமடைந்துள்ளனர்.

சில தமிழ்பேசும் முஸ்லிம் மக்களும் கொலை செய்யப்பட்டுள்ளனர். முழுக் கிராமங்களும் நாசமாக்கப்பட்டதுடன் சரித்திர பிரசித்தி பெற்ற சல்லி காளி அம்மன் கோவிலும் குண்டுவீசித் தகர்க்கப்பட்டது. மேலும் இக்கோவிலின்புனிதத் தன்மை இராணுவத்தினரால் கெடுக்கப்பட்டது பலதமிழ்ப் பெண்களின் கற்பு இராணுவத்தினரால் சூறையாடப் பட்டது.

திருமலை வடக்குப் பகுதியில் உள்ள கிராமங்களுக்கு உணவு விநியோகத்தை இராணுவத்தினர் தடைசெய்தமையால் பல ஆயிரக்கணக்கான மக்கள் பட்டினிச்சாவை எதிர்நோக்குகின்றனர்.

இவ்வாறான இராணுவத்தினரின அட்டூழியங்கள் சமாதானத்திற்கு ஒரு அச்சுறுத்தலாக அமைவதுடன், தமிழ் மக்களை அவர்களின் பாரம்பரிய, இனவாரியான பிரதேசங்களில் இருந்து திட்டமிட்டுத் துரத்துவதற்கு மேற்கொள்ளப்பட்டவையென நிரூபிக்கின்றது என திரு அமிர்தலிங்கம் தனது மகஜரில் குறிப்பிட்டுள்ளார். இந்நிலையில் இனப்பிரச்னைக்கான சமாதானப் பேச்சுவார்த்தை ஒரு அர்த்தமற்றதாகி விடுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## போராளிகளால் தடுக்கப்பட்டனர்

கிளிநொச்சி, வியாழன்

இராணுவ முகாமிற்கு அழைக்கப்பட்ட கிளிநொச்சி மாவட்ட கிராமசேவை அலுவலர்கள் பரந்தனில் வைத்து நேற்று, புதன்கிழமை இராணுவ முகாம் செல்லவிடாது போராளிகளால் திருப்பி அனுப்பப்பட்டனர். இதைத் தொடர்ந்து கிராம சேவையாளர் இராணுவ அதிகாரிகள் சந்திப்பு நடைபெறவில்லை. (கே)

## தீவிரவாதிகள்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சுதந்திரத்தை நாம் மீண்டும் அடைவது அவ்வளவு இலகுவான செயல் அல்ல என்று கூறிய ஜனாதிபதி ஐக்கியதேசியக்கட்சி சுதந்திரத்தைப் பேணப்பாதுகாக்கிறது அதனால்தான் 1971ம் ஆண்டு எழுந்த கிளர்ச்சியை அடக்குவதற்கு, அன்று ஆட்சிசெய்த அரசுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கியது என்றார். [எ]

## மரண அறிவித்தல்

### சின்னையா சிவலிங்கம்

கட்டுவனைச் சேர்ந்த சின்னையா சிவலிங்கம் 6-10-86ல் காலமானார் இவர் தந்தை செல்வா தொடக்கநிலைப் பள்ளியின் முன்னைநாள் அதிபரும், இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க முன்னைநாள் பொருளாளரும், கிறிஸ்தவ சகாயநிதிச்சங்கம், பயிற்றப்பட்ட ஆசிரியர் சங்கங்களின் முன்னைநாள் செயலாளரும், பூபதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கிருபைக்குகன், சிவனேசக்குகன் சிவராவதி, விவேகானந்தன் (டாகா), அருளானந்தன், சோமநாதர் (லங்கா சீமெந்து லிமிட்), சிவபூபதி ஆகியோரின் அன்புத்தந்தையுமாவார். அன்னாரது இறுதிக்கிரியைகள், 6-10-86ல் தெல்லிப்பழையில் நடைபெற்றன இவ் அறிவித்தலை சகலருக்கும் உரிய நேரத்தில் அறிவிக்கமுடியாமைக்கு மனம் வருந்துகின்றோம்

தகவல்: திருமதி பூபதி சிவலிங்கம், கட்டுவன், தெல்லிப்பழை,

(C 5130)

### திருமதி தாமோதரம்பிள்ளை சிவக்கொழுந்து

திருமதி தாமோதரம்பிள்ளை சிவக்கொழுந்து காலமானார் இவர் சபாபதி தாமோதரம்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கதிரேசு சின்னத்தங்கம் ஆகியோரின் அன்பு மகளும், அருளானந்தம் பீ ஏ (சாவகச்சேரி இந்துக்கல்லூரி), தனஞ்செயன், மகேஸ்வரன், சந்திரசிறி புவனேஸ்வரன் (கோப்பாய்தொழில்நுட்பக்கல்லூரி), கிரிசாம்பாள் ஆகியோரின் அன்புத் தாயாரும், தரிணிதேவி (ஆசிரியை, மத்திய மகாவித்தியாலயம், புளியங்குளம்), சிறீராகவன் (பிரான்ஸ்), சத்தியேஸ்வரி, நவமணி ஆகியோரின் மாமியாரும், சுப்பிரமணியம் செல்லத்துரை, துரைராசா (தொலைத்தொடர்பு திணைக்களம், யாழ்ப்பாணம்), சண்முகம் (உதவி அரசாங்க அதிபர் காரியாலயம், சங்கானை), கோபாலபிள்ளை (ஓமான்), பாக்கியம், அன்னபூரணம், சின்னத்தங்கச்சி ஆகியோரின் சகோதரியுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 11-10-86 (நாளை) சனிக்கிழமை மு. ப. 9 மணியளவில் இல. 16, ஒட்டுமடம் வீதியிலுள்ள இல்லத்தில் நடைபெற்று கோம்பயன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும். அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

(C 5136)

தகவல்: சந்திரன்

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1986-ம் ஆண்டு அக்டோபர்மாதம் 10-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P O Box 49. Telegram Eelanadu Telephone: 22389—24126